*6*

# பாடு அனுபவிக்கும் தேவ பிள்ளைகள் என்ற வகையில் நடந்து கொள்ளுதல் (பாகம் 3)

## (4:1-11)

### *மாம்சத்திற்கு விரோதமாக ஆயுதம் அணிந்து கொள்ளுதல் (4:1-3)*

**[1]இப்படியிருக்க, கிறிஸ்து நமக்காக மாம்சத்திலே பாடுபட்டபடியால், நீங்களும் அப்படிப்பட்ட சிந்தையை ஆயுதமாகத் தரித்துக்கொள்ளுங்கள்.**
**[2]ஏனென்றால் மாம்சத்தில் பாடுபடுகிறவன் இனி மாம்சத்திலிருக்கும் காலம்வரைக்கும் மனுஷருடைய இச்சைகளின்படி பிழைக்காமல் தேவனுடைய சித்தத்தின்படியே பிழைக்கத்தக்கதாகப் பாவங்களை விட்டோய்ந்திருப்பான்.**
**[3]சென்ற வாழ்நாட்காலத்திலே நாம் புறஜாதிகளுடைய இஷ்டத்தின்படி நடந்துகொண்டதுபோதும்; அப்பொழுது நாம் காமவிகாரத்தையும் துர்இச்சைகளையும் நடப்பித்து, மதுபானம்பண்ணி, களியாட்டுச்செய்து, வெறிகொண்டு, அருவருப்பான விக்கிரகாராதனையைச் செய்துவந்தோம்.**

*3:13-18ல் அப்போஸ்தலர், தமது வாசகர்களின் பாடுகள் பற்றிக் குறிப்பிட்டிருந்தார். அவர்கள் தங்கள் துன்பங்களை, கிறிஸ்துவுக்காகப் பாடநுபவித்தல் என்ற பின்னணிக்கு எதிராகக் கண்ணோக்க வேண்டும் என்று அவர் வற்புறுத்திக் கேட்டுக் கொண்டார். பேதுருவின் நாட்களில் வாழ்ந்தவர்கள் நியாயத்தீர்ப்பை எதிர்கொண்டிருந்தது போன்றே, தேவனுடைய நியாயத்தீர்ப்பை எதிர்கொண்டிருந்த நோவாவின் நாட்களில் இருந்த மக்களுக்கு இயேசுவினால் அறிவிக்கப்பட்ட பிரசங்கத்தை, ஆண்டவரின் பாடுகள் அவருடைய சிந்தைக்குக் கொண்டுவந்தன. இடைப்பிறவரலுக்கான 3:19-22ன் குறிப்புகளுக்குப் பின்பு அப்போஸ்தலர், கிறிஸ்துவின் பாடுகளுக்குத் திரும்பச் சென்றார். ஆண்டவருடைய பாடுகள், பேதுருவின் வாசகர்கள் தங்கள் சொந்த வாழ்வில் கண்ட நிலைகுலைவு பற்றி அவர்களுக்குப் போதிக்கச் சிலவிஷயங்களைக் கொண்டிருந்தன என்பதை அவர்கள் அறியவேண்டும் என்று பேதுரு விரும்பினார்.*

***வசனம் 1.*** *இயேசு "பாவங்களுக்காக மரித்தார்" என்று 3:18ல் பேதுரு கூறியிருந்தார். இப்போது அவர்,* **கிறிஸ்து நமக்காக மாம்சத்திலே**

***பாடுபட்டபடியால்*** என்று கூறினார். ஒருவேளை பேதுரு, “பாடுபட்ட” என்ற சொற்றொடரைக் கொண்டு, கிறிஸ்து தமது மனித அவதாரத்தில் பெற்ற பாடு முழுவதையும் குறிப்பிட்டிருக்கலாம். அவரது பாடுகளில், அவர் பக்குவமடைய வளர்ந்தது, தமது சொந்த மக்களால் புறக்கணிக்கப்பட்டது, மற்றும் மக்கள் கூட்டத்துடன் அவரது நீண்ட நேரங்கள், அவர்களுக்குப் போதித்து நோயாளிகளைக் குணமாக்கியது ஆகியவை உள்ளடங்கி இருக்கலாம். கிறிஸ்தவர்கள் பாடுகளை எதிர்கொள்ளுகையில், கிறிஸ்துவின் பாடுகளைப் பேதுரு அவர்களுக்கு நினைவூட்டி, அவரது பிறப்பு முதல் இறப்பு வரையில் அவர்களுக்கு உதாரணமாக முன்வைத்திருப்பார். எல்லா விஷயங்களிலும் அவர்கள் “அவருடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து” (2:21) செல்ல வேண்டியவர்களாக இருந்தனர். அவர்கள் பாடநுபவிக்கும்போது, அவர்கள் கர்த்தரைக் கண்ணோக்கி அவரது உதாரணத்தில் இருந்து தைரியத்தை மேற்கொள்ள வேண்டியவர்களாக இருந்தனர். பேதுருவின் வார்த்தைகளைப் புரிந்துகொள்ள இது சாத்தியமான ஒரு வழியாக உள்ளது, ஆனால் இன்னொரு வழியும் உள்ளது.

பேதுரு, சிலுவையில் கிறிஸ்து பெற்ற மீட்கும் மரணத்தை நோக்கிக் குறிப்பாகத் தமது வாசகர்களின் கவனத்தை இழுத்தார் என்பது இன்னொரு சாத்தியக்கூறாக உள்ளது. அவ்விஷயத்தில், கிறிஸ்து “மாம்சத்தில் பாடநுபவித்தார்” என்ற குறிப்பானது, அவர் “பாவங்களுக்காக மரித்தார்” (3:18) என்று கூறும் இன்னொரு வழியாக உள்ளது. அது பேதுருவின் கருத்தாயிருந்தால், இங்கு விஷயமாக இருந்தது, கிறிஸ்து தமது ஊழியத்தின்போது அவர்களுக்கு முன்வைத்த உதாரணம் அல்ல. மாறாக அப்போஸ்தலர் தமது வாசகர்கள் தங்கள் முந்திய பாவவாழ்விற்குத் தங்கள் முதுகுகளைத் திருப்பத் தேவையான ஏவுதலைப் பெற, கிறிஸ்துவின் மீட்பின் ஊழியத்தைக் கண்ணோக்க வேண்டும் என்று அவர் [பேதுரு] விரும்பினார். இயேசு தமது மானிட வாழ்வின் ஓட்டத்தின்போதும் சிலுவையின் துன்பத்தின்போதும் சகித்திருந்த பாடுகளுக்கு இடையில் நேர்த்தியான ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்துதல் தேவையற்றதாக இருந்தது. நாம் ஒரு தேர்ந்துகொள்ளுதலை ஏற்படுத்தியாக வேண்டும் என்றால், அது மீட்பிற்காகக் கிறிஸ்து பாடநுபவித்தல் என்பதே பேதுரு தமது சிந்தையில் கொண்டிருந்தார் என்பதாகவே இருக்கச் சாத்தியமுண்டு. சிலுவையின் மீது கிறிஸ்துவின் பாடானது, உச்சநிலை அடைந்தது, செறிவூட்டப்பட்டது மற்றும் கனிதரும் நிலைக்கும் கொண்டுவரப்பட்டது. கிறிஸ்து [நமக்குப்] பதிலாக பலியானது என்பதே அப்போஸ்தலரின் சிந்தையினுடைய மையமாக இருந்தது (2:24; 3:18).

***ஆயுதமாகத் தரித்துக்கொள்ளுங்கள்*** என்று மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தை கிரேக்க மொழியில் *hoplizo* என்ற வினைச் சொல்லின் இடை வினைச்சொல்லாக உள்ளது. நேரடியான அர்த்தத்தில் இவ்வார்த்தை “உங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ளுங்கள்” அல்லது “ஆயத்தமாயிருங்கள்” என்று அர்த்தப்படுகிறது, ஆனால் இவ்வார்த்தை இராணுவக் குறிப்பால் உணர்த்தும் அர்த்தம் கொண்டுள்ளது. இராணுவ சந்தர்ப்பப் பொருள்களில் இது “போர் செய்ய உங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ளுங்கள்” என்ற கருத்தைக் கொண்டுள்ளது. இவ்வார்த்தையின் வினைச்சொல் வடிவம், புதிய ஏற்பாட்டில் இவ்விடத்தில் மாத்திரமே காணப்படுவதாயிருக்க, இதன் *hoplon*

என்ற பெயர்ச்சொல் வடிவமானது, ஆவிக்குரிய யுத்தத்தின் ஆயுதங்களைப் பற்றிக் குறிப்பிடப் பவுலினால் பயன்படுத்தப்பட்டுள்ளது (ரோமர் 13:12; 2 கொரிந்தியர் 6:7; 10:4).

பேதுருவைப் பொறுத்தமட்டில், கிறிஸ்தவ வாழ்வு என்பது பொல்லாங்கை எதிர்த்து அமைதியாகச் சிறு சண்டை இடுதல் என்பதைக் காட்டிலும் அதிகமானதாக இருந்தது. அது எல்லா வகையிலும் யுத்தம் செய்வதைக் கொண்டிருந்தது. எபேசியர் 6:11ல் பவுல் வேறு ஒரு வார்த்தையைப் பயன்படுத்தியபோது கருத்து ஒன்றாகவே இருந்தது: "பகலுக்குரியவர்களாகிய நாமோ தெளிந்தவர்களாயிருந்து, விசுவாசம் அன்பு என்னும் மார்க்கவசத்தையும், இரட்சிப்பின் நம்பிக்கையென்னும் தலைச்சீராவையும் தரித்துக்கொண்டிருக்கக்கடவோம்" (காண்க 1 தெசலோனிக்கேயர் 5:8). கிறிஸ்தவர், தமது சிந்தையில் *(ennoia)* தமது புரிந்துகொள்ளுதலில், கிறிஸ்து அளித்துள்ள ஆவிக்குரிய வள ஆதாரங்களை ஆயுதமாகத் தரித்துக் கொள்ள வேண்டும் என்று பேதுரு கூறினார். NASB வேதாகமத்தில் **அப்படிப்பட்ட (same purpose)** என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தைகள், NIV வேதாகமத்தில் "same attitude" என்றும் NRSV வேதாகமத்தில் "same intention" என்றும் தரவழைக்கப்பட்டுள்ளன. விசுவாசிகள் தங்களுக்கு முன்பாக அமைத்து வைக்கப்பட்டுள்ள கிறிஸ்துவின் உதாரணத்தைப் பின்பற்றி, தாங்கள் பாடு அநுபவிக்கும்போது அதே சிந்தை நிலையை ஆயுதமாகத் தரித்துக் கொள்ள வேண்டும். இயேசு அளித்த ஆயுதங்கள் அவர்களை எதிர்கொண்ட பாடுகளின் கடுமையான வேதனையினூடே அவர்களைத் தாங்கி வழிநடத்தும்.

கிறிஸ்து உதாரணப்படுத்திய அதே சிந்தையை, கிறிஸ்தவர் தமது ஆயுதமாகத் தரித்துக் கொள்ள வேண்டியது ஏன் என்பதை விளக்குவதற்கு, முடிவில்லாத கலந்துரையாடலைத் தோற்றுவித்த பின்வரும் சொற்றொடரைப் பேதுரு அளித்தார்; **ஏனென்றால் மாம்சத்தில் பாடுபடுகிறவன் ... பாவங்களை விட்டோய்ந்திருப்பான்.** [இது தமிழ் வேதாகமத்தில் 2ம் வசனமாகத் தரப்பட்டுள்ளது]. NASB வேதாகமத்தின் மொழிபெயர்ப்பு நேரடியானதாக உள்ளது, ஆனால் இது கடினமான கேள்விகளை எழுப்புகிறது. ஒருவர் கிறிஸ்தவராயிருக்க வேண்டுமென்றால் அவர் பாடு அநுபவித்தல் அவசியமானது என்று பேதுரு இங்கு மறைமுகமாய் உணர்த்துகிறாரா? "மாம்சத்தில்" பாடநுவித்தல் என்பது பாவத்தைத் தடைசெய்வதாக உள்ளது என்று அப்போஸ்தலர் கூறினாரா? பெரும்பான்மை யான கிறிஸ்தவர்கள், தாங்கள் "பாவங்களை விட்டோய்ந்திருப்பதாக" உரிமைகோரத் தைரியம் கொண்டிருக்க மாட்டார்கள். பூரணமடைதல் என்பது இனிவரும் வாழ்க்கைக்கு உரியதே தவிர இந்த வாழ்விற்கு உரியதல்ல. யோவான், "நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது" என்று எழுதினார் (1 யோவான் 1:8). இந்த ஆழ்சிந்தனைகள், எல்லாக் கிறிஸ்தவர்களும் அல்லது "மாம்சத்திலே பாடுபடுகிறவர்கள்" மாத்திரம் கூட, கிறிஸ்துவை உரிமையாக்கிக் கொண்டால் அதன் பின்பு ஒருக்காலும் பாவம் செய்ய மாட்டார்கள் என்று அப்போஸ்தலர் அர்த்தப்படுத்தினார் என்ற கருத்தைச் சாத்தியமற்றதாக்குகின்றன. NIV வேதாகமம், தெளிவிற்காக நேரடியான மொழிபெயர்ப்பைத் தியாகம் செய்யத்தயாராக உள்ளது. இது "be-

cause he who has suffered in his body is done with sin" [*ஏனெனில் தனது மாம்சத்தில் பாடநுபவிக்கிறவன் பாவத்தைத் தீர்த்து வைக்கிறான்*] என்று மொழிபெயர்த்தலின் மூலம் இவ்வசனப்பகுதியின் கருத்தைப் பிடிக்க முயற்சிசெய்கிறது. NRSV வேதாகமம் இதை, "for whoever has suffered in the flesh has finished with sin" [*ஏனெனில் தனது மாம்சத்தில் பாடநுபவிக்கிறவன் பாவத்தை முடித்து வைக்கிறான்*] என்று தரவழைக்கிறது.

வெய்ன் A. குரூடெம் அவர்கள் பின்வரும் பொழிப்புரையைக் கொண்டு "பாவங்களை விட்டோய்ந்திருப்பான்" என்ற சொற்றொடரின் அர்த்தத்தை உரித்தெடுத்து வைத்தார்: "சரியானதைச் செய்தமைக்காகப் பாடு அநுபவித்துள்ள எவரும், தாம் பாடு அநுபவித்தாலும் தொடர்ந்து தேவனுக்குக் கீழ்ப்படிந்து சென்றிருந்தால், பாவத்தை தெளிவாக முறித்துப் போடுதலைச் செய்திருக்கிறார்."[1] மனந்திரும்புதல் என்பது ஒருமுறைக்கு அதிகமான துணிவான செயலாக உள்ளது. இது பாவத்துடன் ஒரு தெளிவான முறிவைக் கொண்டுள்ளது. இது ரோமர் 6:3-7ல் உள்ள சிந்தனையைப் போன்றதாக உள்ளது. ஒருவர் கிறிஸ்தவர் என்ற வகையில் பாடு அநுபவிக்கும்போது, அவரது வாழ்வில் அதற்குமுன் பாவம் பெற்றிருந்த பிரியமான இடத்தை இனியும் பெற்றிராது. பாடு அநுபவித்தல் என்பது சுத்திகரிக்கும் செயல்விளைவைக் கொண்டுள்ளது (1:7) அது தற்செயலான விசுவாசத்துடன் உடன்பட்டு இருப்பதில்லை. முற்றான கருத்தில் கிறிஸ்தவர்கள் பாவத்தை விட்டு ஓய்ந்திருப்பதில்லை என்று இருக்கையில், அவர்கள் விசுவாசத்திற்கு விலை செலுத்தும்போது, பாவம் தனது பிடியைத் தளர்த்துவதாகிறது. கிறிஸ்துவின் நாமத்திற்காகப் பாடு அநுபவிப்பவர்கள் தேவனுடைய சித்தத்தை மீறுதலில் இனியும் இலேசாய்ப் பங்கேற்றலை ஒருக்காலும் அவர்களால் செய்ய முடியாது. கிறிஸ்துவின் பாடுகள், கிறிஸ்தவரின் ஞானஸ்நானம் மற்றும் பரிசுத்தமான வாழ்வு ஆகிய யாவும் பேதுருவின் சிந்தனைகளில் இருந்தன.

**வசனம் 2.** கிறிஸ்துவுக்காக வாழுதல் என்பது வாழ்நாள் முழுவதற்குமான உறுதிப்பாடாக உள்ளது. ஆத்துமாவானது தேவனைப் பற்றி ஒன்றும் அறியாதிருக்கும்போது, அப்படிப்பட்ட ஆத்துமாவைக் கொண்டவருடைய வாழ்வு மாம்ச இச்சைகளை மனம் போனபடி பின்பற்றிக் கொண்டிருக்கும் வேளையில், அவர் சுவிசேஷத்தைக் கேள்விப்பட்டு அதற்குக் கீழ்ப்படிகிறார், அவர் வாழ்வின் புதிய பாதையொன்றைத் தழுவிக்கொள்கிறார். கிறிஸ்தவர்களின் வாழ்வு இரு வித்தியாசப்பட்ட காலகட்டங்களாக அமைந்துள்ளது: (1) அவரது ஞானஸ்நான மறுஜென்மத்திற்கு முந்திய வாழ்வு மற்றும் (2) மறுபடியும் பிறந்தபின்பு அவரது வாழ்வு (காண்க எபேசியர் 4:22-24; தீத்து 3:3-5). விசுவாசி தமது வாழ்வைக் கிறிஸ்துவுக்குக் கொடுத்துள்ள நிலையில், "பாவத்தை விட்டு ஓய்ந்திருப்பார்." அவர் **இனி மாம்சத்திலிருக்கும் காலம்வரைக்கும் ... தேவனுடைய சித்தத்தின்படியே பிழைக்கத்தக்கதாக** தம்மை அர்ப்பணித்துள்ளார். கடந்தகாலத்தை மாற்ற முடியாது. ஆகையால் அதனைப் பற்றி அதிகமாய்ச் சிந்திக்க வேண்டிய அவசியம் இல்லை. இன்னமும் கிறிஸ்தவர், தமது வாழ்வின் பழைய வழி தமக்குப் பின்னால் இருந்தாலும் அதை வெட்கத்துடனே கண்ணோக்குகிறார். பூமியில் அவர் இனிப் பிழைத்திருக்கும் எஞ்சியகாலம், நிமிடங்களில் அல்லது பத்தாண்டுகளில் எப்படி கணக்கிடப்பட்டாலும், அவர் **மாம்சத்திலிருக்கும்** காலம்வரைக்கும்

போதுமானவற்றைக் கொண்டிருக்கிறார். பாவம் என்பது வாழ்வை மதிப்புக் குறைவாக்கி மனிதப்பண்பை போக்குகிறது.

பேதுருவின் சக விசுவாசிகள் தங்கள் விசுவாசத்திற்காகப் பாடு அநுபவிக்கும்போது பேதுரு கவலை கொண்டார், ஆனால் குறைந்த பட்சம் அவர்கள் **மனுஷருடைய இச்சைகளின்படி பிழைக்காமல்** இருக்க வேண்டும் என்று அவர் கவலைகொண்டார். ஒருவர் சொந்த நடத்தையின் விளைவாக மாத்திரமே பாடுகள் வரலாம். நாசரேத்தூர் இயேசுவைப் பற்றி அறிந்தவர்களுக்கு இவ்வாறு ஒருக்காலும் நடைபெறக்கூடாது. புறதெய்வ வணக்கத்தவரான அயலகத்தார் முன்பாகக் கிறிஸ்தவர்கள் முன்னுதாரணமான வாழ்வு வாழ வேண்டும் என்று அப்போஸ்தலர் வேண்டிக்கேட்டுக் கொண்டார். பாடநுபவித்தல் வரவேண்டியதிருந்தது என்றால், அது கிறிஸ்தவர்கள் சாந்தம் மற்றும் நற்தன்மைக்குத் தங்களை ஒப்புவித்திருக்கையில் நடக்கட்டும். இந்தப் பாடக்கருத்து இந்த நிருபத்தில் இதற்கு முன் வந்துள்ளது. அரசுகளும் நீதிமன்றங்களும் அநீதியானவைகளாக இருக்கலாம், ஆனால் "எல்லாரையும் கனம்பண்ணுங்கள்; சகோதரரிடத்தில் அன்புகூருங்கள்; தேவனுக்குப் பயந்திருங்கள்; ராஜாவைக் கனம்பண்ணுங்கள்" என்ற கட்டளையை விசுவாசிகளுக்குப் பேதுரு கொடுத்தார் (2:17). அடிமைகள் தவறாக நடத்தப்பட்டனர், ஆனால் பேதுரு "நீங்கள் குற்றஞ்செய்து அடிக்கப்படும்போது பொறுமையோடே சகித்தால் அதினால் என்ன கீர்த்தியுண்டு?" என்று எழுதினார் (2:20). அவிசுவாசிகள் தாங்கள் கற்பனை செய்யக்கூடிய ஒவ்வொரு குற்றத்தினாலும் கிறிஸ்தவர்களை அநீதியாகக் குற்றம்சாட்டினர். இருந்தாலும் அப்போஸ்தலர், "தீமைசெய்து பாடநுபவிப்பதிலும், தேவனுக்குச் சித்தமானால், நன்மைசெய்து பாடநுபவிப்பதே மேன்மையாயிருக்கும்" என்று வாதிட்டார் (3:17), பிற்பாடு பேதுரு "ஆதலால் உங்களில் ஒருவனும் கொலைபாதகனாயாவது, திருடனாயாவது, பொல்லாங்கு செய்தவனாயாவது, அந்நிய காரியங்களில் தலையிட்டுக்கொண்டவனாயாவது பாடுபடுகிறவனாயிருக்கக்கூடாது" என்று கூற இருந்தார் (4:15).

NIV வேதாகமம், *sarx* என்ற வார்த்தையை "பொல்லாத மனுஷருடைய இச்சைகள்" என்று மொழிபெயர்க்கிறது. அது இவ்வார்த்தையை வேறொரு இடத்தில் "பாவம் நிறைந்த இயல்பு" என்று மொழிபெயர்க்கிறது. ஆங்கில மொழி வாசகர்கள் ஒரு உவமானத்தைப் புரிந்துகொள்ள இவ்விடத்தில் மொழிபெயர்ப்பாளர்கள் சிறிதளவே திறன் கொடுத்தனர் என்பது துரதிஷ்டவசமானது. பவுல் பேதுரு ஆகிய இருவருமே தெளிவாக *sarx* என்ற வார்த்தையை, மாம்சரீதியான, பாவம் நிறைந்த வழக்கம் கொண்ட மனவிருப்பங்களை அர்த்தப்படுத்தப்படுத்தப் பயன்படுத்தினர். இந்த உவமானத்தை நிற்க நாம் அனுமதித்தால், ஆங்கில வாசகர் "மாம்சம்" என்ற இந்த வார்த்தை கிரேக்க வாசகருக்கு அர்த்தப்படுத்தியதைப் புரிந்து கொள்ளக் கூடியவராகத் தம்மைக் காண்பார். "மாம்சம்" என்பது தீயஉணர்வுரீதியான மனவிருப்பம் என்று புரிந்து கொள்வதற்கு முழுமையான இறையியல் கல்வி தேவைப்படுவதில்லை. பேதுருவின் வாசகர்கள், மாம்ச இச்சைப்படியான வாழ்வுகளான, தங்கள் முந்திய வாழ்விற்குத் தங்கள் முதுகுகளைத் திருப்பிக்காண்பித்து, தங்கள் எஞ்சிய வாழ்நாளில் தேவனுடைய சித்தத்தைச்

செய்வதில் கவனம் குவிக்க வேண்டும் என்று பேதுரு விரும்பினார்.

**வசனம் 3.** யூதராக இருந்தாலும் கிறிஸ்தவராக இருந்தாலும், இஸ்ரவேலின் தேவனை ஆராதித்தவர்கள், கிரேக்க - ரோம ஒழுக்கத்தின்மீது பெரிதும் மதிப்புக் கொண்டிருக்கவில்லை. அவர்கள் நல்ல காரணங்களைக் கொண்டிருந்தனர். பேதுருவின் வாசகர்களில் பெரும்பான்மையானவர்கள், யூதரற்ற பின்னணியில் இருந்து கிறிஸ்துவினிடத்தில் வந்திருந்தனர் அவர்கள் கிறிஸ்தவர்கள் ஆவதற்கு முன்னர், கிரேக்க ரோம வாழ்வு உருவாக்கத்தில் அவர்கள் முழுமையாகப் பங்கேற்றிருந்தனர். அதன் பாலுறவு ரீதியான எழுதப்படாத ஆனால் கலாச்சாரரீதியாக ஒப்புக்கொள்ளப்பட்டிருந்த விதிகளையும் அதன் பொதுப்பண்டிகைகளையும் அவர்கள் தழுவிக் கொண்டிருந்தனர். அவர்கள் கிறிஸ்தவர்கள் ஆனபோது, அவர்களின் பழைய உலகம் தொடர்ந்து அவர்களுக்கு எதிர்நின்றது. நண்பர்களும் குடும்பமும் தாங்கள் எப்போதும் வாழ்ந்திருந்தவாறே அவர்களும் வாழ வேண்டும் என்று எதிர்பார்த்தனர். ஒருவேளை அவர்களில்சிலர் தங்களின் பழைய வாழ்வைக் கைவிடுதலில் மிகவும் தாமதமாகச் செயல்படுபவர்களாக இருந்திருக்கலாம். பேதுரு **சென்ற வாழ்நாட் காலத்திலே நாம் புறஜாதிகளுடைய இஷ்டத்தின்படி நடந்துகொண்டதுபோதும்;** என்று கூறியபோது அவரது வார்த்தைகள் சுடுசொல்லாக இருந்திருக்கலாம். போதுமான அளவு செய்தாயிற்று! “நீ இதை போதிய அளவு நீண்ட காலம் செய்திருக்கிறாய்” என்று ஒரு குழந்தையை அதன் பெற்றோர் கண்டிக்கலாம், இது போதுமான அளவைவிட நீண்டதாக இருப்பதாக அர்த்தப்படுகிறது. இந்தக் கருத்தில்தான் நாம் பேதுருவின் வார்த்தைகளைப் புரிந்துகொள்ள வேண்டும். அவர், “சென்ற வாழ்நாட் காலத்திலே ... நடந்துகொண்டபோதும்” என்று கூறியபோது, அது போதுமான அளவைவிட அதிகமாயிருந்தது என்று அவர் அர்த்தப்படுத்தினார். எந்த ஒரு கிறிஸ்தவரும் “புறஜாதிகளுடைய இஷ்டத்தின்படி” தொடர்ந்து நடந்துகொள்ளக் காரணம் எதுவும் இருக்கவில்லை.

யூதராயிராத எவரொருவரும், யூதர்களுக்கு “புறஜாதியாக” இருந்தனர். வரையறைக்குட்பட்ட கட்டளை கொடுத்து இயேசு சீஷர்களை அனுப்பியபோது, அவர்களிடத்தில் அவர், “நீங்கள் புறஜாதியார் நாடுகளுக்குப் போகாமலும், சமாரியர் பட்டணங்களில் பிரவேசியாமலும்” செல்லுங்கள் என்று கூறினார் (மத்தேயு 10:5). அவர்கள் யூதரல்லாதவர்களுக்குப் போதிக்கக் கூடாதிருந்தனர் என்பது தெளிவாக உள்ளது. இருப்பினும் சபையே உண்மையான இஸ்ரவேலாக இருந்ததை அது புரிந்துகொண்டிருந்தது. சபையே இப்போது இஸ்ரவேலாக இருப்பதால், கிறிஸ்தவ வட்டாரங்களில் “புறஜாதியார்” என்பது கிறிஸ்தவரல்லாதவர்களை அர்த்தப்படுத்துவதாயிற்று. இவ்வாறாகப் பவுல், தெசலோனிக்கேயருக்கு, அவர்கள் “தேவனை அறியாத அஞ்ஞானிகளைப்போல் மோக இச்சைக்குட்படாமல்” (1 தெசலோனிக்கேயர் 4:4) என்று கூறியபோது, அவர் தமது கிரேக்க கிறிஸ்தவ வாசகர்கள், கிறிஸ்துவை அணிந்து ஞானஸ்நானத்தில் கிறிஸ்துவை அணிந்துகொண்ட பின்னரும்கூட, இன்னமும் கிரேக்க இனத்தாராகவே இருந்தனர், ஆனால் அவர்கள் அஞ்ஞானிகளாக/ புறஜாதியாராக இருக்கவில்லை. புறஜாதியார் என்பவர்கள் கிறிஸ்தவரல்லாதவர்களாக இருந்தனர். பவுல் 1 தெசலோனிக்கேயர் 4:4ல் செய்தது போன்றே பேதுருவும் “புறஜாதி

*யார்"* என்ற சொற்றொடரை இங்கு பயன்படுத்தினார். இவ்வார்த்தையை நாம் மொழிபெயர்க்கும் வகையைப் பொறுத்து இது மறைகருத்துக்களைக் கொண்டுள்ளது. ஆங்கிலத்தில் "Gentile" அல்ல ஆனால் "pagan" என்ற வார்த்தையே புறதெய்வ வணக்கத்தவரைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது. எனவே NIV வேதாகமம் *1 பேதுரு 4:3*ல் இதை "pagan" என்று நல்ல காரணத்துடனேயே மொழிபெயர்த்துள்ளது.

விசுவாசிகள் தங்களுக்குப் பின்விட்டுச் செல்ல வேண்டிய பண்புகளின் பட்டியலை *1 பேதுரு 2:1*ல் அப்போஸ்தலர் அளித்திருந்தார். *4:3*ல் அவர் கணிசமான அளவில் மாறுபட்ட பட்டியல் ஒன்றை அளித்தார். முந்திய வசனங்களில், கிறிஸ்தவ சமூகத்திற்குள்ளாக இருந்த பாவங்கள் என்பது பிரச்சனையாக இருந்தது. *4:3*ல் புறதெய்வ வணக்க வாழ்வுப் பாணி என்பது கவனத்தின் கீழ் உள்ளது. புறதெய்வ வணக்க வாழ்வின் பண்புகள் என்ற வகையில் பேதுரு முன்வைக்கும் பாவங்களின் பட்டியல், வேறு நிருபங்களில் உள்ள இப்படிப்பட்ட பட்டியல்களைப் போன்றதாக உள்ளது. *4:3*, ரோமர் *13:13*, மற்றும் கலாத்தியர் *5:19-21* ல், களியாட்டுப் பழக்கங்கள் (குடித்தல் மற்றும் பாலுறவு ரீதியான மோசமான நடக்கை) ஆகியவை மேலான செல்வாக்குப் பெறுகின்றன. ஒவ்வொரு வார்த்தை பற்றிய சுருக்கமான ஆய்வு ஒன்று உதவிநிறைந்ததாக இருக்கும்.

**காமவிகாரம்** (*aselgeia*) என்பது, பாலுறவு ரீதியான கட்டுப்பாட்டைக் கைவிடுதல் என்று அர்த்தப்படுகிறது. இது தேவனோ அல்லது மனிதரோ, தகுந்த அல்லது ஏற்புடைய நடக்கை என்ற வகையில் அளிக்கும் விளக்கத்தைப் பற்றி அக்கறையெதுவும் காண்பிக்காத நடத்தையைக் குறிக்கிறது. ஒருவர், விளைவுகளைப் பற்றிய நினைவு எதுவுமின்றி, மிருகம் போன்று காம உணர்வு சார்ந்த விருப்பங்களுக்கு தம்மை ஒப்புக்கொடுக்கும்போது, அவர் இந்தப் பாவத்தைச் செய்த குற்றமுள்ளவராக இருக்கிறார். **துர்இச்சைகள்** (*epithumia*) (ஆங்கிலத்தில் **lusts**) என்பது தன்னிலே ஒரு நடுநிலை வார்த்தையாக உள்ளது. இதன் ஆங்கில கிரேக்க மொழி அர்த்தத்தின்படி இது, நல்ல அல்லது மோசமான விருப்பங்களைக் குறிப்பிடலாம். சந்தர்ப்பப்பொருள்தான் *1 பேதுரு 4:3*ல் உள்ள *"துர் இச்சைகள்"* [lusts] என்பதன் அர்த்தத்தை முடிவு செய்கிறது. சில விருப்பங்கள் நல்லவையாக உள்ளன. NASB வேதாகமம் இதே கிரேக்க வார்த்தையை, பிலிப்பியர் *1:23*ல் "desire" [தமிழில் **"ஆசை"**] என்று மொழிபெயர்க்கிறது: ***"தேகத்தைவிட்டுப் பிரிந்து, கிறிஸ்துவுடனேகூட இருக்க எனக்கு ஆசையுண்டு."*** இவ்வார்த்தையை சட்டவிரோதமான விருப்பங்களை, விசேஷமாக பாலுறவு இயல்பாக இருந்தவை பற்றி அர்த்தப்படுத்துவதற்காகப் பேதுரு இங்கு பயன்படுத்தினார். **மதுபானம்பண்ணுதல்** (*oinophlugia*) என்பதற்கு சிறிதளவே விளக்கம் தேவைப்படுகிறது. குறிப்பிட்ட இந்த கிரேக்க வார்த்தை, அளவுக்கு மீறி மதுபானம் அருந்துதல் பற்றி, புதிய ஏற்பாட்டில் இந்த ஒரு இடத்தில் மாத்திரம் பயன்படுத்தப்பட்டுள்ளது. பழங்கால உலகத்திலும் நவீன உலகத்திலும், பாலுறவுரீதியான ஒழுக்கக்கேடு, நெறிமுறையற்ற வாழ்வு மற்றும் மதுபானம் அருந்துதல் ஆகியவை யாவும் இணைந்துள்ளன.

**களியாட்டு** (*kōmos*) என்பது கிரேக்க தெய்வங்களுக்கு அர்ப்பணிக்கப்பட்ட விழாக்களுடன் இணைவு கொண்டிருந்த கேளிக்கைக் கூத்தாட்டத்தைக் குறிக்கிறது. தியோனிசஸ் என்ற கடவுளை ஆராதித்தலில் இப்படிப்பட்ட

கொண்டாட்டங்கள் குறிப்பாக இணைந்திருந்தன. ஒரு விருந்து நடைபெறும்போது, கிறிஸ்தவர் தமது தோழமையைத் தேர்ந்தெடுத்தலின் அவசியம் குறித்து இங்கு அவருக்கு நினைவூட்டப்படுகிறது. **வெறி** (*potos*) என்பது முந்திய வார்த்தையுடன் நெருங்கிய உறவு கொண்டதாகும், ஆனால் அதில் மார்க்கரீதியான அர்த்தம் எதுவும் இல்லை. இவ்வார்த்தை புதிய ஏற்பாட்டில் இந்த இடத்தில் மாத்திரமே பயன்படுத்தப்பட்டுள்ளது, ஆனால் மார்க்கம் சாராத பொது உலகத்தில் இது, தாராளமாகத் தரப்படும் விருந்துகளைக் குறித்தது. மதுபானம் பண்ணுதல் மற்றும் பாலுறவுரீதியான ஒழுக்கக் கேடுகள் ஆகியவற்றிற்கு இடையில் உள்ள நெருங்கிய தொடர்பு மீண்டும் எதையும் பலனாகத் தரத் தகுதியற்றதாக உள்ளது. **அருவருப்பான விக்கிரகாராதனை** என்ற வார்த்தையைக் கொண்டு, விசுவாசிகள் தவிர்க்க வேண்டிய குற்றங்களின் பட்டியலைப் பேதுரு முடித்து வைத்தார் என்பது தற்செயல் நிகழ்வு அல்ல. இவையாவையும் விக்கிரக ஆராதனையில் இருந்து வந்திருந்தன. கிரேக்க - ரோமக் கடவுள்களை ஆராதித்தலானது, ஒழுக்கவீன நடத்தையைக் கட்டுப்படுத்துதலில் இருந்து தூரத்தில் இருந்தது, மேலும் இது ஒழுக்கவீனத்திற்கு ஆதாரவளமாக, பிறப்பிடமாக இருந்தது. விக்கிரக ஆராதனை வெட்கக் கேடானதாக இருந்தது; அது படைப்பின் தேவனை கனவீனப்படுத்தியதால் "அருவருப்பானதாக" இருந்தது. இத்துடன் கூடுதலாக, இது மனிதரை இழிவுபடுத்தும் நடத்தையை அனுமதித்து அதை ஊக்குவிப்பதாக இருந்தது. பிள்ளைகளை மோக இச்சைக்காகக் காட்சிப்படுத்துதல் முதல் வாளேந்திய வீரர் போட்டிகள் வரையிலும், பாலுறவு ரீதியான கொண்டாட்டங்கள் வரையிலும், இவை யாவையும் கிரேக்கர்களின் உலகத்தில் இடம் பெற்றிருந்தன, இவைகள் அவர்களின் கடவுள்களிடம் இருந்து கண்டிக்கும் வார்த்தை எதையும் கொண்டிருக்கவில்லை.

## புறதெய்வ வணக்கக் கணக்கொப்புவிப்பு (4:4-6)

**4 அந்தத் துன்மார்க்க உளையிலே அவர்களோடேகூட நீங்கள் விழாமலிருக்கிறதினாலே அவர்கள் ஆச்சரியப்பட்டு, உங்களைத் தூஷிக்கிறார்கள். 5 உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்தோர்களுக்கும் நியாயத்தீர்ப்புக்கொடுக்க ஆயத்தமாயிருக்கிறவருக்கு அவர்கள் கணக்கொப்புவிப்பார்கள். 6 இதற்காக மரித்தோரானவர்கள், மனுஷர்முன்பாக மாம்சத்தி லே ஆக்கினைக்குள்ளாக்கப்பட்டிருந்தும், தேவன் முன்பாக ஆவியிலே பிழைக்கும்படியாக, அவர்களுக்கும் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது.**

பேதுருவின் சிந்தை, அவரது வாசகர்கள் முன்பு ஆரத்தழுவியிருந்த, புறதெய்வ வணக்க சமூகத்தைப் பண்புப்படுத்திய தேவபக்தியற்ற வாழ்வில் இருந்து, விக்கிரக ஆராதனை மற்றும் ஒழுக்கக்கேடுகள் ஆகியவற்றில் விசுவாசிகள் தொடர்ந்து பங்கு பெற வேண்டும் என்ற புறதெய்வ வணக்கத்தாரின் வலியுறுத்திற்குத் திரும்பிற்று. புறம்தள்ளப்பட்ட வாழ்வைப் பெற்றவர்கள், தங்கள் வாழ்வின் நடத்தையை, அதில் பங்கேற்பதன் மூலமாக மற்றவர்கள் உறுதிப்படுத்தவில்லை என்றால் ஆறுதல் அடைவதில்லை என்பது நேர்மாறானதாக உள்ளது. புறதெய்வ வணக்கத்தாரின் ஒழுக்கவீனங்களில் பங்கேற்க விசுவாசிகள் மறுத்தபோது, அவர்கள் காயீனைப் போன்று

விசுவாசிகளைத் தாக்கினர் (1 யோவான் 3:12), அவர்கள் தங்கள் சொந்த வாழ்வைக் குற்றம் சாட்டும் வகையில் நல்ல வாழ்வு வாழ்ந்த விசுவாசிகளை வெறுத்தனர்.[2]

**வசனம் 4.** நெருக்கமாகப் பிணைந்திருந்த கிரேக்க நகரங்களில் பொதுவாழ்வு என்பது பண்டிகைகள், விளையாட்டுகள் மற்றும் தெய்வங்களுக்கு அர்ப்பணிக்கப்பட்ட சடங்குகள் ஆகியவற்றைச் சுற்றிச் சூழ்ந்திருந்தன. பொதுப்பண்டிகைகளில் களியாட்டுச் செய்தவர்கள், பேதுரு இங்கு கண்டனம் செய்திருந்த - மதுபானம்பண்ணுதல் மற்றும் காமவிகாரம் என்ற - செயல்களை நடப்பித்து இருந்தனர். இவ்விதமான வாழ்வில் இருந்து கிறிஸ்தவர்கள் விலகித்தெளிவாக இருந்தனர் என்பது (4:1) பல குடிமை நிகழ்வுகளில் அவர்கள் பங்கேற்றலைச் சாத்தியமற்றதாக ஆக்கியிருந்தது. அவிசுவாசிகள் அதை குற்றப்படுத்தும் செயலாக கண்டனர், கிறிஸ்தவராகுதல் என்ற செயலேகூட சிறிதளவே ஆர்வத்தைத் தூண்டியிருக்க வாய்ப்பிருந்தது. கிறிஸ்தவர்கள் தங்கள் மார்க்கம் குறித்து பகுத்தாய்தல் மாத்திரம் கொண்டிருந்தால், அவிசுவாசிகள் தங்கள் அயலகத்தில் ஒருவர் அல்லது தங்கள் உறவினர் ஒருவர் இயேசுவை தேவன் என்ற வகையில் ஆராதிக்கத் தேர்ந்துகொள்ளுதல் பற்றிக் குற்றப்படுத்துவதாகக் கண்டறிதல் அரிதாகவே இருந்திருக்கும். கிரேக்கக் கலாச்சாரத்தில் எப்போதுமே இன்னொரு தெய்வத்திற்கு இடம் இருந்தது. இருப்பினும், அதே மக்கள் பொது நிகழ்வு ஒன்றிற்கான அழைப்பை மறுத்தபோது, அவர்களின் பழைய பாரம்பரியங்கள் மற்றும் பழைய தெய்வங்கள் யாவும் ஒன்றுமே இல்லை என்பது போன்று அவர்கள் அவற்றில் இருந்து விலகி நின்றபோது, புறதெய்வ வழிபாட்டுக்காரார்கள் **ஆச்சரியப்பட்டனர்**. ஒரு புதிய தெய்வம் அவர்களைக் குற்றப்படுத்தவில்லை, ஆனால் கிறிஸ்தவர்கள் ஏற்படுத்திய உரிமைகோருதலில் அவர்கள் [புறதெய்வ வணக்கக்காரார்கள்] குற்றப்பட்டனர்: தேவன் ஒருவரே தவிர வேறில்லை. பழைய தெய்வங்கள் ஒன்றும் இல்லை. குடிமை நிகழ்வுகளில் கலந்துகொள்ள அவர்களின் அயலகத்தவர்களும் நண்பர்களும் மறுத்தபோது, அது குற்றப்படுத்துதலாக இருந்தது. இதைவிட மேலாக, அது அவமானப்படுத்துதலாக இருந்தது.

கிறிஸ்தவம் என்பது எதிர்க்கலாச்சாரச் செயல்தாக்கம் உள்ளதாக இருந்தது மற்றும் அவ்வாறே இன்னும் தொடருகிறது. நசரேயனாகிய இயேசுவின் போதனைகள், காமவிகாரமான மக்களின் ஒழுக்கக் கேடு மற்றும் அநீதி ஆகியவற்றிற்கு அறைகூவல் விடுத்தன. இயேசுவை உதடுகளால் மாத்திரம் துதித்தலுக்கு ஆதரவு தெரிவித்துப் பேதுரு எழுந்து நிற்கமாட்டார். ஒருவர் கிறிஸ்துவை உரிமையாக்கிக் கொண்டே, தாம் முன்பு செய்திருந்தபடி, புறதெய்வ வணக்கத்தாரோடே கூட **அந்தத் துன்மார்க்க உளையிலே** விழுந்து கிடக்க முடியாது. "உளை" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள *anachusis* என்ற வார்த்தை நேரடியாக "வெள்ளம்" என்று அர்த்தப்படுகிறது. புறதெய்வ வணக்க சமூகத்தைப் பண்புப் படுத்திய [அவர்கள்] கைவிட்டிருந்த கண்மூடித்தனமான வாழ்வு என்ற அதே வெள்ளத்தில் அவர்கள் பேராவலுடன் ஒரு நபர் "தங்களுடன் அடித்துச் செல்லப்படாது" இருந்ததைக் கண்டு "ஆச்சரியப்பட்டனர்," இவ்வசனத்தில் "dissipation" *(asōtia)* என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள அதே வார்த்தையை, எபேசியர் 5:18ல் பவுல்

பயன்படுத்தினார். பேதுருவைப் போல் பவுலும் இவ்வார்த்தையை மதுபானம் பண்ணுதலுக்கு இணைவித்துள்ளார்.

சாதாரணமானது என்று இந்த உலகம் ஏற்றுக்கொள்ளும் நடத்தையைக் குற்றம்சாட்டும் வகையிலான வழியில் கிறிஸ்தவர்கள் வாழ வேண்டும் என்று பேதுருவின் வார்த்தைகள் அவர்களுக்கு அறைகூவல் விடுக்கின்றன. மக்கள் தங்கள் சொந்த வாழ்வையும் மற்றவர்களின் வாழ்வையும், மதுபானம், போதைப்பொருள்கள், பாலுறவுரீதியான ஒழுக்கக் கேடு மற்றும் வன்முறை ஆகியவற்றைக் கொண்டு மலிவுபடுத்தி அழிக்கும்போது தேவன் அதில் பிரியப்படுவதில்லை. இப்படிப்பட்ட செயல்களில் தேவனுடைய மக்கள் ஈடுபடக்கூடாது. உலகத்தைக் குற்றப்படுத்துதல் பகைமைக்கு அழைப்பு விடுவிக்கும் என்று அஞ்சுபவர்களுக்கு இயேசுவின் பின்வரும் வார்த்தைகள் நினைவுபடுத்தத் தகுதியானவையாக உள்ளன: **“எல்லா மனுஷரும் உங்களைக்குறித்துப் புகழ்ச்சியாய்ப் பேசும்போது உங்களுக்கு ஐயோ; அவர்கள் பிதாக்கள் கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கும் அப்படியே செய்தார்கள்”** (லூக்கா 6:26).

விசுவாசிகள் இந்த உலகத்தைக் குற்றப்படுத்தும் வகையில் வாழும்போது, அவர்கள் இந்த உலகம் புறம்கூறித் தூற்றுவதை எதிர்பார்க்கலாம். கிரேக்க மொழியில், **உங்களைத் தூஷிக்கிறார்கள்** என்ற சொற்றொடர் ஒரே ஒரு வார்த்தையாக மாத்திரமே உள்ளது. மிகவும் நேர்ப்பொருளில் இது (*blasphemeo* என்பதில் இருந்து வரும் வார்த்தையான) “தேவதூஷனம் கூறுதல்” என்று வாசிக்கப்படுகிறது. இவ்வார்த்தை, தூயதும் பரிசுத்தமுமானதைப் பழித்துரைத்தல் என்று அர்த்தப்படுகிறது. ஒருவர் தேவனுடைய நாமத்தைத் தூற்றுகிறபோது அவர் தேவதூஷணம் கூறுகிறார், ஆனால் தேவனுடைய மக்களின் நாமத்தைப் பழித்துரைத்தல் தேவனேயே பழித்துரைத்தலாக இருக்கும் அளவுக்குத் தேவன் தமது மக்களுடன் மிகவும் அதிகமாக ஐக்கியமயிருக்கிறார். இதை நடபடிகள் 9:4 வசனப்பகுதி வெளிப்படுத்துகிறது. தர்சு பட்டணத்து சவுல் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்திக் கொண்டிருந்தார், ஆனால் தமஸ்கு செல்லும் சாலையில் அவரிடம் பேசிய இயேசு, **“சவுலே, சவுலே, நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய்?”** என்று கேட்டார் (நடபடிகள் 9:4). அவிசுவாசிகள் தேவனுடைய மக்களை பழிதூற்றும்போது அவர்கள் தேவனேயே தூஷிக்கின்றனர் என்று கூறப் பேதுரு தயங்காதிருந்தார்.

**வசனம் 5.** பேதுரு இந்த நிருபத்தை முதன்முதலாகப் படிக்கும்படி யாருக்கு எழுதினாரோ, அந்தக் கிறிஸ்தவர்கள், தங்கள் அயலகத்தவர்களாக இருந்த அவிசுவாசிகளிடத்தில் இருந்து தாங்கள் பெற்ற அநீதியான குற்றச்சாட்டுகள் குறித்துக் கவலைப்பட அவசியம் இல்லாதிருந்தது. திருப்பித் தூற்றுதல் என்பது அவர்களின் தனிச்சலுகையாக இருக்கவில்லை. **“பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன், என்று கர்த்தர் சொல்லுகிறார்”** (ரோமர் 12:19). அவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கே **கணக்கொப்புவிப்பார்கள்.** அவர் நீதியின்படியே ஒவ்வொரு நபருக்கும் **நியாயத்தீர்ப்புக்கொடுப்**பார் மற்றும் தகுதியான தீர்ப்பையே அவர் கொடுப்பார். தேவனை எதிர்த்து நிற்பவர்களும் அவரது மக்களுக்குக் கொடுமை செய்பவர்களும் தாங்கள் செய்யும் செயல்கள் பற்றிக் கணக்கு ஒப்புவிக்க வேண்டிய நிலையில் உள்ளனர்.

புதிய ஏற்பாடு முழுவதிலும் ஒரு தயக்கமற்ற ஆய்வுக்கருத்து உள்ளது:

தேவனுடைய நியாயத்தீர்ப்பு தற்போதைய இந்த யுகத்தை முடிவுக்குக் கொண்டுவரும். தேவனுடைய நியாயத்தீர்ப்பு ஓரளவிற்கு ஏற்கனவே தொடங்கி உள்ளது. பாவத்தில் வாழ்பவர்கள் இந்த வாழ்விலேயேகூட பாவத்தின் விளைவுகளைச் சுமந்தாக வேண்டும். இன்னும் இந்த உலகத்தில் நியாயம் எப்போதுமே மேலோங்கி இருப்பதில்லை; கர்த்தருடைய நாளில் அது மேலோங்கி இருக்கும். பேதுருவைப் பொறுத்த மட்டில், நிச்சயமாய் வரவிருக்கும் நியாயத்தீர்ப்பு, "மனிதர் கணக்கு ஒப்புவிக்க வேண்டிய நிலையை வலியுறுத்துகிறது மற்றும் இங்கு இப்போதுள்ள வாழ்வின் பகுதியாக உள்ள தவறுகள் எல்லாவற்றின் மீதும், நியாயத்தின் நிச்சயத்தன்மையானது நிறைவில் வெற்றிபெற்று ஓங்கும்."[3]

தூஷணம் செய்பவர்கள் நிச்சயமாகவே "கணக்கு ஒப்புவிப்பார்கள்," அவர்கள் எப்போது கணக்கு ஒப்புவிப்பார்கள் என்பது இன்னொரு காரியம். கர்த்தர் விரைவிலேயே திரும்ப வருவார் என்று பேதுரு எதிர்பார்த்திருந்தார். இயேசு நியாயாதிபதியாகப் பூமிக்குத் திரும்பத் **தயாராக** நின்றார் (காண்க 4:7). அது எப்போது நடைபெற இருந்தது என்பதை மிகச்சரியாகக் கூறும் சுகவீன ஆலோசனைத் தீர்க்கதரிசனம் எதையும் அப்போஸ்தலர் கொண்டிருக்கவில்லை, அவர் தற்காலப் பிரசங்கியார்கள் நன்கு பின்பற்றக்கூடிய வகையில் தன்னடக்கமாக இங்கு உரைத்தார். கர்த்தர் வரும் நேரத்தைத் திட்டவட்டமாக அறிதலைக் காட்டிலும் அவர் வருகையை எதிப்பார்த்து வாழுதல் கிறிஸ்தவர்களுக்கு அதிக முக்கியமாக உள்ளது. பூமியின்மீது வாழ்வு என்பது முழுமையாக மலர்ந்து இருக்கையில் கர்த்தர் மறுபடியும் வருவார். பெருவெள்ளத்திற்கு முன்பு நோவாவின் காலத்தில் மக்கள் உண்டு குடித்து, பெண்கொண்டு பெண்கொடுத்து வாழ்ந்த நாட்கள் போலவே இதுவும் இருக்கும் (லூக்கா 17:27). தேவன் **உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்தோர்களுக்கும்** நியாயத்தீர்ப்புக் கொடுப்பார். அவர் மறுபடியும் வருவதற்கு முன்னர் மரிப்பவர்கள் உயிர்ப்பிக்கப்பட்டு ஆவிக்குரிய உடல்களில் ஐக்கியப்படுவார்கள் (1 கொரிந்தியர் 15:44). அவர் மறுபடியும் வரும்போது உயிரோடு இருப்பவர்கள் மறுரூபம் அடைந்து (1 தெசலோனிக்கேயர் 4:17) ஆவிக்குரிய உடல்களில் ஐக்கியப்படுவார்கள். தேவனுடைய மக்களை அநியாயமாய்க் குற்றம்சாட்டி அவர்களுக்குத் தீங்கு விளைவித்தவர்கள் "கணக்கு ஒப்புவிப்பார்கள்."

**வசனம் 6.** இவ்வசனம் பல்வேறு வகையான விளக்கங்களின் விளைவாக ஏற்படும் சிரமங்களை முன்வைக்கிறது. பின்வரும் விளக்கங்கள் அந்த சிரமங்கள் யாவற்றையும் ஆழ்ந்து சிந்திக்க முயற்சி மேற்கொள்வதில்லை.அதற்குப்பதிலாகஅவைகள்.அதிகம்சாத்தியமாகஉள்ளஇரண்டு சிரமங்கள் மீது கவனம் செலுத்துகின்றன. இவ்வசனத்தை விளக்கப்படுத்துவதற்கு ஏற்படும் முதல் சிரமம் இதன் சந்தர்ப்பப் பொருளில் இருந்து உதிக்கிறது. கிறிஸ்து **"உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்தோர்களுக்கும் நியாயத்தீர்ப்புக்கொடுக்க ஆயத்தமாயிரு"** ந்தார் என்பதை அப்போஸ்தலர் உற்றுக்கவனித்திருந்தார் (4:5). மற்றும், பேதுருவும் அவரது வாசகர்களும் கர்த்தர் விரைவில் திரும்ப வருவார் என்று எதிர்பார்த்து இருந்தனர் (4:7).

தெசலோனிக்கே நகரில் இருந்தவர்கள் மத்தியில் எழும்பி இருந்த

அதே கேள்விகள் (1 தெசலோனிக்கேயர் 4:13-18). பேதுருவின் வாசகர்கள் மத்தியிலும் எழும்பி இருக்கலாம். அவர்களில் சிலர் இறந்திருந்தனர், இன்னமும் கர்த்தர் திரும்பி வந்திருக்கவில்லை. கர்த்தர் திரும்பி வருவதற்கு முன்பு மரித்தவர்கள், அவர் திரும்பி வரும்போது உயிருடன் இருப்பவர்களால் மகிழ்வுடன் அனுபவிக்கப்படும் அதே இரட்சிப்பில் பங்கடைவார்களா? மரித்திருந்தவர்களுக்கு நியாயத்தீர்ப்பு என்ற கருத்து கேள்விகளை எழுப்பி இருந்ததால், தேவபக்தியின்றி வாழ்ந்து மரித்தோர் கணக்கு ஒப்புவிக்க வேண்டும் என்று கர்த்தர் வற்புறுத்தும்போது, விசுவாசநிறைவில் வாழ்ந்து மரித்தோரை அவர் இரட்சிப்பாரென்று பேதுரு தமது வாசகர்களுக்கு மறு உறுதிப்படுத்தினார். **இதற்காக** (இயேசு துன்மார்க்கரை நியாயந்தீர்க்கும் அதே வேளையில் மீட்கப்பட்டோரை இரட்சிப்பார் என்ற நோக்கத்திற்காக) **அவர்களுக்கும் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது** என்று எழுதியதன் மூலம் அவர்களுக்கு அவர் மறு உறுதி அளித்தார்.

குறிப்பிட்ட எந்த நபருக்காவது பிரசங்கித்தல் என்ற கருத்தை அப்போஸ்தலர் தமது சிந்தையில் கொண்டிருந்ததாகக் காணப்படவில் லை. NASB வேதாகமம், ஒருமுறை மாத்திரம் நிகழும் செயலைக் குறிப்பிடும் செயப்பாட்டு வினைச்சொல்லை *(euēngelisthē)* நபர்த்துவம ற்றதாக மேற்கொள்கிறது, இது “சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டது” (தமிழ் வேதாகமத்தில் **“சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது”**) என்ற மொழிபெயர்ப்பை விளைவித்துள்ளது, ஆனால் சிலர் இந்த மொழிபெயர்ப்பில் திருப்தி அடைவதில்லை. அவர்கள் சந்தர்ப்பப் பொருளைக் கவனிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்து, இயேசுவின் பிரசங்கித்தலையே பேதுரு தமது சிந்தையில் கொண்டிருந்தார் என்று விவாதிக்கின்றனர். 4:5ல் இயேசுவே நியாயந்தீர்க்கப்போகிறவராயிருந்தார். ஆகையால் 4:6ல் (விவாதம் இவ்வாறு செல்வதால்) இயேசுவே சுவிசேஷத்தைப் பிரசங்கித்தவராயிருந்தார். இவ்வசனம் “இந்த நோக்கத்திற்காகவே சுவிசேஷம் மரித்தோருக்கும்கூட *இயேசுவினால்* பிரசங்கிக்கப்பட்டது” என்ற கருத்துள்ளது என்று அவர்கள் எடுத்துக்கொள்கின்றனர். 4:6ம் வசனம் 3:19ல் பேதுருவின் உறுதிப்படுத்துதலைப் பெருக்கமாக்குகிறது என்பதே இங்கு விவாதமாக உள்ளது. அங்கு பேதுரு **“அந்த ஆவியிலே அவர் போய்க் காவலிலுள்ள ஆவிகளுக்குப் பிரசங்கித்தார்”** என்று கூறினார். இவ்விரு வசனப்பகுதி களுமே, இயேசு சிலுவையில் தாம் பெற்ற மரணத்திற்குப் பின், தமது உயிர்த்தெழுதலுக்கு முன்பு, தாமே நேரடியாக மரித்தோரின் உலகத்திற்குச் சென்றார் என்ற கருத்தை ஆதரிக்க எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

3:19ன் மீதான விளக்கங்களின்படி, Descensus என்று அழைக்கப்படும் உபதேசமானது, வேதாகமத்தில் வேறு இடங்களில் நிலைநாட்டப்பட்டுள்ள உபதேசங்களுக்கு நேரெதிர் கருத்துக்கள் எதையும் அளிப்பதில்லை. இருப்பினும் இயேசு, தமது திருஅவதாரத்திற்கு முற்பட்ட காலத்தில், [தேவன் மீது] விசுவாசத்துடன் வாழ்ந்திருந்தவர்களுக்கு, சிலவகையான அறிவித்தல்களை கொடுக்கும் நோக்கத்துடன். பாதாளத்திற்குப் பயணம் மேற்கொண்டார் என்று 4:6ம் வசனம் யூகிக்கும் என்பது குறைந்தபட்சம் கேள்விக்கு உரியதாகவாவது உள்ளது. 3:19ல் *kērussō* என்ற வார்த்தை “பிரசங்கித்தார்” அல்லது “அறிவித்தார்” என்று மொழிபெயர்க்கப்பட்டு

இருக்கையில், *4:6ல் euangelizō* என்ற வார்த்தையே "அறிவிக்கப்பட்டது" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, இது "சுவிசேஷத்தைப் பிரசங்கித்தல்" என்று அர்த்தப்படுகிறது. வெற்றியை அறிவிக்கவே இயேசு பாதாளத்திற்குச் சென்றார் என்பது எண்ணிப்பார்க்க இயலாததாக இருப்பதில்லை, ஆனால் பாவிகளின் இரட்சிப்புக்கு இரண்டாவது வாய்ப்பை அளிப்பதற்காக இயேசு, மரித்தோரின் அந்த உலகத்திற்குச் சென்றிருப்பார் என்பது எண்ணிப்பார்க்க இயலாததாக இருக்கிறது. சாதாரணமாக, சுவிசேஷத்தைப் பிரசங்கித்தல் என்பது இரட்சிப்பை அளித்தல் என்பதை மறைமுகமாய் உணர்த்துகிறது. பேதுரு தமது நிருபத்தின் வேறொரு பகுதியில், இந்த உலகில் ஒருவரது விசுவாசம் மற்றும் வாழ்வு ஆகியவற்றின் விளைவாகவே இரட்சிப்பு உள்ளது என்று தெளிவுபடுத்தினார் *(1:9, 17)*.

KJV, NASB மற்றும் NIVஆகிய வேதாகமங்களில் காணப்படும் வினைச்சொல் மாற்றம், இவ்வசனத்தைப் புரிந்துகொள்ள உதவுகிறது. கடந்த காலத்தில் "சுவிசேஷம் ... இப்போது மரித்து இருப்பவர்களுக்கு ... அறிவிக்கப்பட்டது." வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், அவர்கள் இப்போது மரித்துள்ளனர், ஆனால் அவர்களுக்குச் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டபோது அவர்கள் மரித்திருக்கவில்லை. இந்த உலகத்தில் கிறிஸ்துவுக்குத் தங்கள் முதுகைத் திருப்பிக் காண்பிப்பவர்களுக்கு அவர்கள் மரித்த பின்பு மீட்பு அளிக்கப்படும் என்ற போதனை எதையும் புதிய ஏற்பாடு அளிப்பதில்லை. எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், "ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது" என்று தெளிவாக்கியுள்ளார் *(எபிரெயர் 9:27)*. NRSV வேதாகமத்தின் மிகநேரடியான மொழிபெயர்ப்பை நாம் தழுவிக்கொண்டாலும்கூட, அது "For this is the reason the gospel was proclaimed even to the dead" என்றே உள்ளது, இப்போது மரித்து உள்ளவர்களுக்கு [அவர்கள் உயிரோடு இருந்த] ஒரு காலத்தில் பிரசங்கிக்கப்பட்டது என்பதே மறைகருத்தாக உள்ளதே ஒழிய, மரித்தோருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது என்ற மறைகருத்து இங்கு இருப்பதில்லை. இயேசு சிலுவை மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றிற்கு இடைப்பட்ட தமது காலத்தை எங்கு செலவிட்டார் என்பது பற்றிய வாசகர்களின் கேள்விகளுக்குப் பேதுரு பதில் எழுதிக்கொண்டிருக்கவில்லை. கர்த்தர் வெளிப்படுத்தப்படும்போது அவர்கள் **ஆவியிலே பிழைத்திருப்பார்கள்** என்பதை அவர்களுக்கு மறு உறுதிப்படுத்தவே அவர் இதை எழுதினார்.

பேதுருவின் வாசகர்கள் சிலுவையின் செய்தியைக் கேள்விப்பட்டிருந்ததில் ஆசீர்வதிக்கப்பட்டிருந்தனர். அவர் இங்கு, கிறிஸ்துவின் மரணம் அடக்கம் உயிர்த்தெழுதல் ஆகியவற்றுடன் கட்டுப்படுத்தப்பட்ட வகையில், "சுவிசேஷம்" என்ற வார்த்தையை பயன்படுத்தவில்லை, ஆனால் இரட்சிப்பைக் கொண்டுவரும் கிறிஸ்துவைப்பற்றி செய்தி என்ற பரந்த கருத்தில் பயன்படுத்தினார். தேவன் மக்களைத் தமக்காக மீட்டுக் கொள்வதற்காக தம் குமாரனை அனுப்பினதன் மூலம் தம் வாக்குத்தத்தத்தை நிறைவேற்றினார் என்ற செய்தியே சுவிசேஷமாக உள்ளது. இயேசுவைக் குறித்து பேசிய பிரசங்கித்தலே நல்ல செய்தியான சுவிசேஷமாக இருந்தது. இது "சுவிசேஷம் ... இப்போது மரித்திருப்பவர்களுக்குக் கூட பிரசங்கிக்கப்பட்டிருக்கிறது"

என்று வாசிக்கப்பட்டால், இந்த மொழிபெயர்ப்பை மேம்படுத்தும். அப்போஸ்தலர் இங்கு "மரித்தோர்" என்று குறிப்பிடும் மனிதர்கள், தங்களுக்கு இயேசு பிரசங்கிக்கப்பட்டபோது மரித்திருக்கவில்லை, ஆனால் அவர்கள் கர்த்தர் நியாயாதிபதியாக திரும்பி வருவதற்கு முன்னர் மரித்தனர். அங்கு மறு உறுதிப்பாட்டிற்கான தேவை கிடக்கிறது. பேதுரு தமது சிந்தையில் கொண்டிருந்த "மரித்தோர்" என்பவர்கள் குறிப்பாக, மரித்தி ருந்த கிறிஸ்தவர்களாவர். 4:6ன் கருத்துக்கள் யாவும் விசுவாசிகளுக்கு மறு உறுதிப்பாடாக உள்ளது.

1 பேதுரு 4:6ம் வசனம் மூன்றில் ஒரு வழியில் 3:19 உடன் உறவுபடலாம்: (1) நோவா என்ற நபரில் இயேசு மரித்தோருக்குப் பிரசங்கித்தார் என்று 3:19ம் வசனம் அர்த்தப்படும் என்றால், இவ்வசனம் அந்த ஒப்புவமையை விரிவாக்குகிறது எனலாம். இவ்விஷயத்தில் நாம், பழைய ஏற்பாட்டில் தீர்க்கதிரிசிகளும் ஏவுதல் பெற்றவர்களும் செய்த உபதேசம் மற்றும் பிரசங்கம் யாவும் ஒரு கருத்தில், கிறிஸ்துவே மக்களுக்கு "சுவிசேஷத்தை" பிசங்கித்தார் என்று புரிந்துகொள்ள வேண்டும். இயேசு யாருக்கு "அறிவித்தாரோ" (3:19) அவர்கள் இந்த வசனத்தில் "மரித்தோரானவர்கள்" ஆக இருக்கின்றனர். இவ்வசனங்களின் இந்த விளக்கமே பேதுரு தமது வாசகர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று மனவிருப்பம் கொண்டிருந்த விளக்கம் என்று நாம் நம்புகிறோம். (2) இயேசு தாம் சிலுவையில் அறையப்பட்டது மற்றும் உயிர்த்தெழுந்தது ஆகியவற்றிற்கு இடைப்பட்ட காலத்தில் மரித்தோரின் உலகத்திற்குச் சென்றார் என்று 3:19ம் வசனம் அர்த்தப்படுத்துமென்றால், கடந்த காலத்தில் இருந்து விசுவாச நிறைவுடன் வாழ்ந்திருந்தவர்களுக்குக் கிறிஸ்து, சிலுவையின் மீது தமது வெற்றியை அறிவித்தார் என்பதே 4:6ன் அர்த்தமாக உள்ளது எனலாம். கடந்தகாலத்தில் மரித்தவர்கள் கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தினால் மாத்திரமே இரட்சிக்கப்பட முடியும், ஆகவே அவர்கள் விசுவாசித்து இரட்சிக்கப்படும்படி, அவர் தமது வெற்றியை அவர்களுக்கு அறிவித்தார். மரித்தோர் யாவரும் சுவிசேஷத்தைக் கேள்விப்பட்டு அதன் மூலம் இரட்சிக்கப்பட்டனர் என்பதோ அல்லது கீழ்ப்படியாதவர்களுக்குக் கூட இரண்டாவது வாய்ப்பு தரப்படும் என்பதோ இங்கு போதனையாக இருப்பதில்லை. ம ாறாக, கிறிஸ்து மரிப்பதற்கு முந்திய காலகட்டத்தில் விசுவாசத்துடன் வாழ்ந்திருந்தவர்கள் கேள்விப்பட்டு, விசுவாசித்து, இரட்சிக்கப்படக் கூடியவர்களாக இருப்பார்கள் என்பதே அர்த்தமாக உள்ளது. பூமியில் வாழ்ந்திருந்த காலத்தின்போது விசுவாசமாக வாழ்ந்திருந்தவர்கள் கேள்விப்பட்டு, விசுவாசித்து, இரட்சிக்கப்படக் கூடியவர்களாக இருப்பார்கள் என்பதே அர்த்தமாக உள்ளது. பூமியில் வாழ்ந்திருந்த காலத்தின்போது விசுவாசமாக வாழ்ந்திருந்தவர்களுக்கு ஜீவனின் நியாயத்தீர்ப்பை விளைவித்த, மரித்தோருக்கான அதே நியாயத்தீர்ப்பு, தங்கள் பூமிக்குரிய வாழ்வில் அவிசுவாசமும் கீழ்ப்படியாமையும் கொண்டிருந்தவர்களுக்கு மரணத்தின் நியாயத்தீர்ப்பாக இருக்கும்.

மரித்தோரைக் குறித்து, **மனுஷர்முன்பாக மாம்சத்திலே ஆக்கினைக் குள்ளாக்கப்பட்டிருந்தவர்களுக்கு,** அவர்கள் **"ஆவியிலே பிழைக்கும்படியாக"** இயேசு பிரசங்கித்தார் என்று பேதுரு கூறினார். "மனுஷர்முன்பாக மாம்சத்திலே

ஆக்கினைக்குள்ளாக்கப்பட்டிருத்தல்" என்பது அதை அர்த்தப்படுத்துகிறது? NASB வேதாகமம், "மனுஷர்முன்பாக" *(kata anthrōpous)* என்ற சொற்றொடர் "மனிதர்களின் வழக்கப்படியே" அல்லது "மனிதர்முறைமைப்படி" என்று அர்த்தப்படுவதாக எடுத்துக் கொள்கிறது. கிறிஸ்தவர்கள் மரணத்தை அனுபவித்தல் என்ற மனிதகுலத்தின் பொதுப் பங்கில் பங்கடைந்தாலும், மரணம் என்பது அவர்களுக்கு எல்லா விஷயங்களின் முடிவாக இராது என்று கிறிஸ்தவர்களுக்குப் பேதுரு உறுதிப்படுத்தினார். பாவத்தின் விளைவாக எல்லா மக்களும், அதாவது கிறிஸ்தவர்களும் கிறிஸ்தவரல்லாதவர்களும் ஒன்றுபோலவே மரிக்கின்றோம். விசுவாசிகள் மற்ற எல்லா மனிதர்களையும் போல மரணத்தை அனுபவித்தாலும், கிறிஸ்து வெளிப்படும்நாளில் அவர்களை அவர் மீட்டுக்கொள்வார் என்பதே விசுவாசிகளுக்கு மறு உறுதிப்பாடாக உள்ளது. NRSV வேதாகமம் இங்கு அதிகமான சொற்களைப் பயன்படுத்துகிறது என்றாலும், அது கருத்தை நல்ல முறையில் பிடித்துக் காண்பிக்கிறது: "... ஒவ்வொருவரும் நியாயந்தீர்க்கப்படும் வகையில் அவர்கள் மாம்சத்தில் நியாயந்தீர்க்கப் பட்டிருந்தாலும், தேவன் வாழ்வது போன்று அவர்கள் ஆவியில் வாழ்வார்கள்." கிறிஸ்தவர்கள் "மனுஷர்முன்பாக மாம்சத்திலே ஆக்கினைக்குள்ளாக்கப்பட்டனர்" என்பது, எல்லா மக்களைப் போலவே அவர்களும் மரித்தனர் என்றே அர்த்தப்படுகிறது. அவிசுவாசிகள் மீது போன்றே விசுவாசிகள் மீதும் அதே உரிமைகோருதலைப் பாவம் ஏற்படுத்துகிறது. இருப்பினும் விசுவாசிக்கு அது வரலாற்றின் முடிவாக இருப்பதில்லை. கிறிஸ்து நியாயாதிபதியாக இருப்பதால், அவர்கள் தேவனுடைய சித்தத்தின்படி ஆவியிலே பிழைப்பார்கள்.

## முடிவு சமீபமாயிற்று (4:7-11)

**[7]எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று; ஆகையால் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து, ஜெபம்பண்ணுவதற்கு ஜாக்கிரதையுள்ளவர்களாயிருங்கள். [8]எல்லாவற்றிற்கும் மேலாக ஒருவரிலொருவர் ஊக்கமான அன்புள்ளவர்களாயிருங்கள்; அன்பு திரளான பாவங்களை மூடும் [9]முறுமுறுப்பில்லாமல் ஒருவரையொருவர் உபசரியுங்கள். [10]அவனவன் பெற்ற வரத்தின்படியே நீங்கள் தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்துகொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர்போல, ஒருவருக்கொருவர் உதவிசெய்யுங்கள். [11]ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன்; ஒருவன் உதவிசெய்தால் தேவன் தந்தருளும் பெலத்தின்படி செய்யக்கடவன்; எல்லாவற்றிலேயும் இயேசுகிறிஸ்துமூலமாய்த் தேவன் மகிமைப்படும்படியே செய்வீர்களாக; அவருக்கே மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக ஆமென்.**

பேதுருவின் வாசகர்களைக் கடந்தகாலத்தில் பண்புப்படுத்தியிருந்த பாவங்களில் இருந்து அவர்கள் திரும்ப வேண்டும் என்று பேதுரு வேண்டிக் கேட்டுக் கொண்டார். அவர்களை கொடுமைப்படுத்தியவர்கள், ஜீவனுள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்கும் ஒருவருக்குப் பதில் அளிக்கவேண்டும் என்பதை அவர்களுக்கு அவர் நினைவூட்டியிருந்தார். மேலும் அவர்கள்

*(பேதுருவின் வாசகர்கள்) மரணத்திற்கு உட்பட்டவர்களாக இருந்தபோதிலும், இயேசு அவர்களை ஆவியில் பிழைக்கச் செய்வார் என்பதை அவர்களுக்கு அவர் மறு உறுதிப்படுத்தினார். இப்போது அவர்களுடைய ஊழியத்தின் அவசரத்தன்மையை அவர்களுக்கு அவர் மறு உறுதிப்படுத்தினார். இப்போது அவர்களுடைய ஊழியத்தின் அவசரத்தன்மையை அவர்களுக்கு நினைவூட்டும் வேளையாக இருந்தது. கிறிஸ்து வெளிப்படுவதற்கான வேளை சமீபித்திருந்தது, ஆனால் அதே வேளையில் அவர்கள் தேவனுடைய இராஜ்யத்திற்குப் பாத்திரராகும் வழியில் வாழ வேண்டியிருந்தது. வாழ்வு என்பது சேவை, ஒருவர் மற்றவர் மீது அன்புகூருதல் மற்றும் தேவனை மகிமைப்படுத்துதல் ஆகியவற்றினால் பண்புப்படுத்தப்பட்டிருக்க வேண்டியிருந்தது.*

***வசனம் 7.*** *தெளிவற்ற, நிச்சயமற்ற எதிர்காலத்தில் கர்த்தர் மறுபடியும் தோன்றுவார் என்ற மன உறுதிப்பாட்டிற்கும், அவரது மறுவருகை நிச்சயமானதாக உள்ளது என்ற மன உறுதிப்பாட்டிற்கும் இடையில் கணிசமான வேறுபாடு உள்ளது. முதல் கிறிஸ்தவர்களுக்கு, கர்த்தருடைய வருகை சமீபமாயிருந்தது (1 கொரிந்தியர் 7:29; பிலிப்பியர் 4:5; யாக்கோபு 5:8). எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று. இவ்வசனத்தை ஆன்மீக மயமாக்கும் முயற்சி இதற்கு அநியாயம் செய்வதாக உள்ளது. இதில் தனிநபரான விசுவாசிக்கு மரணத்தின் சமீபத்திற்கான குறிப்பு இருப்பதில்லை. "எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று" என்றும் "ஒரு நபர் எப்போது வேண்டுமானாலும் சாகலாம்" என்றும் கூறுதல் முற்றிலும் வேறுபட்ட கூற்றுகளாக உள்ளன.* ***"எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று"*** *என்று மக்கள் நம்பும்போது, அவர்கள் முற்றிலும் வேறுபட்ட வகையில் வாழ்கின்றனர்.*

*பேதுருவும் அவரது வாசகர்களும் தேவ எக்காளம் முழங்கப்போவதை எதிர்பார்த்துக் காத்திருந்தனர் (1 தெசலோனிக்கேயர் 4:16). இரவில் திருடன் வருகிறவிதமாய் கர்த்தர் தோன்றும் வேளை "சமீபமாயிருந்தது" என்று விசுவாசித்திருந்தனர் (1 தெசலோனிக்கேயர் 5:2; 2 பேதுரு 3:10). சமகாலக் கிறிஸ்தவர்கள் சிலர் அந்தக் கருத்தைப்பற்றச் சங்கடம் அடைந்தனர், ஏனென்றால் பேதுரு தவறாகக் கூறியது போன்று தோன்றுகிறது. இரண்டாயிரம் ஆண்டுகள் கடந்து விட்டன, மற்றும் அவர் இன்னும் வரவில்லை. இப்படிப்பட்ட சிந்தனையானது இவ்வசனப்பகுதியின் கருத்தைத் தவறவிடுகிறது. ஒவ்வொரு காலத்திலும் உள்ள கிறிஸ்தவர்கள் எதிர்பார்த்தலில் வாழ வேண்டியுள்ளது. ஜான் முர்ரே அவர்கள், "இறுதித்தீர்ப்பு பற்றிய கண்ணோக்கைக் கொண்டு, பொருள்கள் உலகப்பிரகாரமானவை மற்றும் தற்காலிகமானவை என்பதை, நமது எண்ணப்போக்கு எப்போதும் பண்புப்படுத்த வேண்டும்" என்று கூறியபோது இதை நன்கு விளக்கப்படுத்தினர்.[4] "நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும்" (தீத்து 2:13) எதிர்பார்த்துக் கொண்டிருப்பவர்கள் பரிசுத்தமான வாழ்வை வாழும்படி ஏவப்படுகின்றனர். அவரது வருகை சமீபித்து இருக்கிறது என்ற மன உறுதிப்பாடு இல்லாமல், விசுவாசிகள் எவ்வாறு எதிர்பார்ப்பில் வாழ முடியும்? "மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன் என்றார். ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும்" (வெளிப்படுத்தின விஷேசம் 22:20).*

மத்தேயு 24; 25ம் அதிகாரங்களில், “ஒலிவமலை உரையாடல்” என்று அழைக்கப்படும் பகுதியில், இயேசு தமது மறுவருகையைப் பற்றித் தமது சீஷர்களிடத்தில் பேசினார். மிகச்சரியான வேளை எது என்று யூகித்தல் பயனற்றது என்று எச்சரித்தபின்பு (மத்தேயு 24:26) அவர், உவமைகளின் வரிசையொன்றை அளித்தார். அவற்றில் ஒன்று, வேலைக்காரன் எதிர்பாராத வேளையில் அவனது எஜமானர் திரும்ப வந்தது பற்றியதாகும். அந்த எஜமானர் திரும்ப வந்ததை, கர்த்தர் தமது சொந்த மறுவருகைக்கு ஒப்பாக எடுத்துக்கொண்டு, சிலர் எதிர்பார்ப்பதைக் காட்டிலும் மிக அதிகவேகமாகப் பூமிக்குரிய விஷயங்களின் முடிவு வரலாம் என்று எச்சரித்தார் (மத்தேயு 24:45-51). இதற்கு மறுபுறத்தில் அவர் தமது மறுவருகையைத் தாமதப்படுத்தலாம்.

அடுத்த உவமை ஞானமுள்ள ஐந்து மற்றும் மதியீனமான ஐந்து கன்னிகைகளைப் பற்றியதாக உள்ளது. மணவாளன் வருகையின் நேரம் கிறிஸ்துவின் மறுவருகையின் வேளைக்கு ஒப்புமைப்பட்டு இருப்பதாகத் தோன்றுகிறது. முந்திய உவமையில் போலின்றி, இது சிலர் எதிர்பார்ப்பதைக் காட்டிலும் தாமதமாகக் கர்த்தர் தோன்றலாம் என்று போதிக்கிறது (மத்தேயு 25:1-13). இந்த பிந்திய உவமையை இயேசு முந்தியது போன்றே முடித்தார்: “மனுஷகுமாரன் வரும் நாளையாவது நாழிகையையாவது நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள்” (மத்தேயு 25:13). தேவனுடைய நியாயத்தீர்ப்பு உடனடியாக வருதல் மற்றும் தாமதமாகுதல் ஆகிய இரண்டிற்கும் இடையில் உள்ள இறுக்கமானது வேதாகமம் முழுவதிலும் மிக நுண்மையாகப் பராமரிக்கப்பட்டுள்ளது. கர்த்தரின் நாள் சமீபமாயிருக்கிறது (ஏசாயா 56:1; செப்பனியா 1:12; யோவேல் 3:14), இருப்பினும் நியாயத்தீர்ப்பு தேவன் தெரிந்துகொள்ளும் நிச்சயமற்ற எதிர்காலம் ஒன்றிற்கு ஒப்புவிக்கப்பட்டுள்ளது. இயேசுவின் கட்டளைகளைப் பின்பற்றிய பேதுரு, “எல்லாவற்றிற்கும் முடிவு” எப்போது நடக்கும் என்ற யூகம் எதையும் அளிக்கவில்லை. அவரது மறுவருகையை எதிர்பார்த்து, முன்னெதிர்நோக்கி கிறிஸ்தவர்கள் வாழ வேண்டும் என்று மாத்திரமே அவர் கூறினார். கர்த்தர் திரும்பவருவார் என்பதல்ல, ஆனால் கர்த்தர் சீக்கிரம் திரும்பவருவார் என்பதே சபையின் உபதேசமாக உள்ளது; கிறிஸ்தவர்கள் கடைசி நாட்களில் வாழ்கின்றனர். சில மணி வேளையில் இயேசுவைக் காண்பதை அவர்கள் எதிர்பார்க்கலாம். விஷயம் அவ்வாறு இருக்க, அவர்கள் நற்பண்பு மற்றும் பரிவிரக்கம் கொண்ட பரிசுத்த வாழ்வை வாழ்கின்றனர்.

காலத்தில் முடிவு பற்றிப் பேதுரு குறிப்பிட்டபோது, பூமியின் மீது ஒரு அரசாட்சியில் ஆயிரம் ஆண்டுகள் இயேசு ஆளுகைசெய்வார் என்பதற்குக் குறிப்புகள் எதையும் ஏற்படுத்தவில்லை என்பதை நாம் கவனிக்க வேண்டும். உபத்திரவம், அந்திகிறிஸ்து அல்லது அர்மெகதோன் பற்றிய குறிப்பிடுதல் எதுவும் இங்கில்லை. கர்த்தர் “உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்தோர்களுக்கும் நியாயத்தீர்ப்புக்கொடுக்க ஆயத்தமாயிருக்கிற” போது அவரது வெளிப்பாடு இருக்கும் (4:5). அது “எல்லாவற்றிற்கும் முடிவு” அதாவது பொருள்ரீதியான இந்த வாழ்வின் முடிவு என்பதாக இருக்கும். அல்லது இப்போது நாம் அறிந்துள்ளபடி மனித வாழ்வின் முடிவாய் இருக்கும். மனிதகுலத்தின் மீட்பிற்கான தேவனுடைய திட்டம் இப்போது

முடித்துவைக்கப்பட்டுள்ளது, கிறிஸ்து மனித வரலாற்றில் தோன்றி இருக்கிறார். மகிமையில் அவரது இரண்டாம் வருகை மாத்திரமே எஞ்சியுள்ளது. அவரது வெளிப்பாட்டில் முழங்கால் யாவும் முடங்கும் நாவுகள் யாவும் அறிக்கையிடும் (பிலிப்பியர் 2:10).

"Eschatology" [இறுதிநாள் இயல்] என்பது, கடைசி விஷயங்கள் (கர்த்தருடைய மறுவருகை, நியாயத்தீர்ப்பு மற்றும் அதைத் தொடர்ந்து வரவிருக்கும் நித்தியம்) பற்றிய படிப்பிற்கான நுட்பத்தி ற்குரிய சொற்றொடராக உள்ளது. புதிய ஏற்பாட்டில் கடைசிக் காலங்கள் பற்றிய படிப்பு, எதிர்காலம் வைத்துள்ளது என்ன என்பதைப் பற்றி ஆர்வத்திற்குரிய வெறும் யூகமாக மாத்திரம் இருப்பதி லை. அப்படிப்பட்ட யூகத்தில் நம் காலத்தை செலவிடுவதில் மதிப்பில் மாறாக இது கர்த்தருடைய மறுவருகை மற்றும் அவருடைய மறுவருகையுடன் இணைந்துள்ள, தேவபக்தியான வாழ்வின் அவசரத்தேவை ஆகியவை பற்றிய ஆழ்ந்த சிந்தனையாக உள்ளது. கர்த்தருடைய மறுவருகை "சமீபமாக உள்ளது" என்பதால், கிறிஸ்தவர்கள் **தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து, ஜெபம்பண்ணுவதற்கு ஜாக்கிரதையுள்ளவர்களாயிருக்க விரும்புவார்கள்.** புதிய ஏற்பாட்டில் இறுதிநாளியில் என்பது எப்போதுமே ஒழுக்கநீதி யான விஷயங்களுக்குப் பயன்படுகிறது. இது தேவபக்தியுள்ள வாழ்வை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

"ஆரோக்கியமான வகையில் முடிவெடுப்பவர்களாயிருந்து" (*sōphroneō*) மற்றும் "தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து" (*nēphō*) என்பவை, அர்த்தத்தில் ஒன்றுபோல் உள்ள இரண்டு கிரேக்கக் கட்டளை வாக்கியங்களின் மொழிபெயர்ப்புகளாக உள்ளன. காலத்தின் முடிவுபற்றிய சிந்தனையானது, கிறிஸ்தவர்கள் கருத்தறிவும் தெளிந்த சிந்தனையும் சுயகட்டுப்பாடும் உள்ளவர்களாக இருந்தலை விளைவிக்கும். 1 பேதுரு 1:13ல் அப்போஸ்தலர், "செயல்பாட்டிற்கு உங்கள் மனங்களைத் தயார் செய்யுங்கள்" என்று எழுதினார், இது அதிக நேர்ப்பொருளில் கூறும்போது "நீங்கள் உங்கள் மனதின் அரையைக் கட்டிக்கொண்டு" என்று உள்ளது (KJV மற்றும் தமிழ் வேதாகமங்கள்). அங்குகூடப் பேதுரு "தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து" என்ற வினைச்சொல்லைப் பயன்படுத்தினார். "எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று" என்பதால், ஒருவர் தமது வாழ்விலிருந்து பாவத்தைப் புறம்பே போடுதலுக்கான காலமாக இருந்தது; தேவபக்தி ஆளுகை செய்ய அனுமதிக்கும் வேளையாக இருந்தது. வேறொரு இடத்தில் அப்போஸ்தலர் எழுதியபடி, "இப்படி இவைகளெல்லாம் அழிந்து போகிறதாயிருக்கிறபடியால் நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்!" (2 பேதுரு 3:11).

தெளிந்த புத்தியுள்ளவர்களாக இருப்பதற்கான வேண்டுகோளானது ஜெபத்திற்கான முன்னுரையாக உள்ளது - இது "ஜெபத்தி ன் நோக்கத்திற்கானதாக" உள்ளது. தேவனுடனான நமது உறவு தீவிரமான விஷயமாக உள்ளது என்பதற்கு ஒரு நினைவூட்டுதலாக[5] பேதுருவின் வார்த்தைகள் உள்ளன. பேரழிவு அச்சுறுத்தும் வேளையில் மாத்திரம் தப்பித்துக் கொள்வதற்கான வழியாக மாத்திரம் தேவனைப் பயன்படுத்துதல் என்பது தேவபக்தியுள்ளவர்களாயிருத்தலில் விளையாடுதலாக உள்ளது. தேவனை

ஆராதனையில், துதியில் மற்றும் ஜெபத்தில் அணுகுதலுக்கு, குறைந்தபட்சம் தியானம் மற்றும் பயபக்தி ஆகியவற்றிற்காக அழைப்பவையாகப் பேதுருவின் வார்த்தைகள் உள்ளன. ஜெபத்தின் நோக்கம் மற்றும் பணி ஆகியவற்றின் மீதான முறைப்படியான சிந்தனைப் பிரதிபிலிப்பு எதையும் வேதாகமம் முன்வைப்பதில்லை. மாறாக அது, ஜெபித்த மக்கள் மற்றும் அவர்கள் ஏறெடுத்த ஜெபங்கள் ஆகியவற்றை நமக்கு முன்வைக்கிறது. மேலும் அது, ஜெபத்தைக் கவனிக்கிற மற்றும் தமது மக்களின் வேண்டுதல்களுக்குப் பதில் அளிக்கிற தேவனை முன்வைக்கிறது. “அப்பொழுது அவர்கள் கூப்பிடுகிறதற்குமுன்னே நான் மறுஉத்தரவுகொடுப்பேன்; அவர்கள் பேசும்போதே நான் கேட்பேன்” (ஏசாயா 65:24).

தேவனுக்கு முன்பாக வருதல் என்பது தீவிர கவனத்திற்குரிய விஷயமாக உள்ளது, இது பயத்திற்குரிய வேளையாக, உள்நோக்கிக் கண்ணோக்கும் வேளையாக உள்ளது. “தீவிரகவனம்” என்பது மனதிற்கு வரும் முதல் வார்த்தையாக இல்லாத நிலையில், தேவனுடைய மகிமையை உரிமைகோரும் சபைகூடுகைகள் உள்ளன. இருபத்தியோராம் நூற்றாண்டில், அமெரிக்கப் பொழுதுபோக்குத் தொழில்துறையானது, தன்னைத்தானே சபைகூடுகையாக வஞ்சகமாக அறிவித்துக்கொண்டது. பலருடைய மனங்களில் ஆராதனை என்பது ஒரு இசைநிகழ்ச்சி போன்று மன எழுச்சியும் கேளிக்கையும் கொண்டதாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று. ஆராதனை ஒரு சந்தோஷத்திற்குரிய விஷயமே, ஆனாலும் சந்தோஷம் என்பது முற்றிலும் கேளிக்கை போன்றதாக இருப்பதில்லை. தேவனுடைய மக்களிடத்தில் பேதுரு வேண்டிக்கேட்டுக்கொள்ளும் தெளிந்த சிந்தையும் நல்ல முடிவும் கொண்டு, ராக் இசைக்குழுக்கள், எலக்ட்ரிக் கிட்டார்கள் மற்றும் இசைக்கேற்ப கைதட்டுதல்கள் மற்றும் இப்படிப்பட்ட கூடுகைகளில் சிலவேளைகளில் இணைவுபெறும் அசைந்தாடுதல்கள் ஆகியவற்றுடன் அவர்கள் (தேவனுடைய மக்கள்) ஒப்புரவாகுதல் கடினமாக உள்ளது. ஏதோ ஒருவகையில், மனந்திரும்புதல், சிந்தித்துப்பார்த்தல், நினைவுகூருதல் மற்றும் நன்றிசெலுத்துதல் ஆகியவற்றைத் தொடுகிற ஆராதனையானது, “தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து, ஜெபம்பண்ணுவதற்கு ஜாக்கிரதையுள்ளவர்களாயிருங்கள்” என்று பேதுரு கூறுகையில் தேவனுடைய மக்கள் மத்தியில் காண அவர் ஆவல்மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ள உணர்வுக்கு அதிகம் பொருத்தமானதாகக் காணப்படுகிறது.

**வசனம் 8.** அவ்வப்போது ஏற்புடையதாக உள்ள நிச்சயமான பாதுகாப்பு மனப்பான்மை உள்ளது. இது கிறிஸ்தவ வாழ்வு முழுவதையும் பண்புப்படுத்துவதில்லை, ஆனால் அதன் பாகமாக உள்ளது. விசுவாசிகள் இந்தப் பாதுகாப்பு மனநிலையின்றி தாக்கப்படும்போது சிலவேளைகளில் அவர்கள் ஆதரவிற்காக ஒன்றுகூடி இறுக்கமாக இணைகின்றனர். 8ம் வசனத்தில் பேதுரு தமது கவனத்தைத் திருப்பும் சமூகம் ஒன்றுகூடி இறுக்கமாக இணைந்துள்ள, ஒருவர் மற்றவர் மீது அன்புகூருகிற சமூகமாக உள்ளது.

அவிசுவாசிகள், “இந்தத் துன்மார்க்க உளையிலே” அவர்களோடேகூட, கிறிஸ்துவின் சீஷர்கள் விழாதிருப்பதினால் ஆச்சரியப்படுகின்றனர் (4:4). விசுவாசிகள் அவ்வப்போது, “உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்தோர்களுக்கும் நியாயத்தீர்ப்புக்கொடுக்க ஆயத்தமாயிருக்கிறவருக்கு

அவர்கள் கணக்கொப்புவிப்பார்கள்" என்பதைத் தங்களுக்குத் தாங்களே நினைவூட்டிக் கொள்ளுதல் ஏற்புடையதாக உள்ளது (4:5). கடைசியில் நியாயமே மேற்கொள்ளும். ஒரு புறத்தில் கிறிஸ்தவர்கள் தங்கள் விரோதிகளிடத்தில் இரக்கமும் மதிப்பும் காண்பிக்க விரும்புகின்றனர், ஆனால் மறுபுறத்தில் அவர்கள், கர்த்தராகிய கிறிஸ்துவுடன் விசுவாசிகள் வெற்றி அடைவார்கள் என்பதன் நிச்சயத்தைக் கொண்டு தங்களை ஆறுதல்படுத்திக்கொள்ள வேண்டியுள்ளது. கிறிஸ்து வெளிப்படும்போது அவர்களை நியாயந்தீர்ப்பார். கர்த்தர் தேவபக்தி இல்லாதவர்களைத் தமது சமூகத்தில் இருந்து நீக்கிப்போடுவார், கிறிஸ்தவரின் விசுவாசத்தைப் பகிர்ந்துகொள்ளாதவர் பற்றிக் கிறிஸ்தவரின் நிலைப்பாடு, மிகவும் தெளிவற்ற தன்மையைத் தன்னுடன் இணைத்துள்ளது. அவர் தமது விசுவாசத்தைப் பகிர்ந்து கொள்ளாதவரின் வாழ்வு முறையை விட்டுத் தம்மைப் பிரித்துக்கொண்டிருக்க வேண்டும், ஆனால் அவர்களும் தேவனுடைய அன்பிற்குரிய படைப்புகளே என்பதை அவர்கள் அறியவேண்டும் என்று அவர் விரும்ப வேண்டும்.

புறம்பே இருப்பவர்களுக்குச் சற்றுக் குழப்பம் உள்ளது, ஆனால் கிறிஸ்தவர்கள் தங்கள் விசுவாசத்தைப் பகிர்ந்து கொள்பவர்களுக்குள் இது இல்லை. விசுவாசிகளிடத்தில் பேதுரு, **ஒருவரிலொருவர் ஊக்கமான அன்புள்ளவர்களாயிருங்கள்** என்று வேண்டுகோள் விடுத்தார். J. N. D. கெல்லி அவர்கள் இந்தக் கட்டளையை, "எல்லாவற்றிற்கும் மேலாக, நீங்கள் ஒருவரிலொருவர் கொண்டிருக்கும் அன்பை முழு பலமுள்ளதாகக் காத்துக்கொள்ளுங்கள்" என்று மொழிபெயர்த்தார்.[6] கிறிஸ்தவர்கள் ஒருவர் மற்றவர் மீது கொண்டுள்ள அன்பு, கிறிஸ்துவின் மீதான அவர்களின் பொதுவான அன்பில் இருந்து வளருகிறது. 1:8ல் அப்போஸ்தலர், "அவரை நீங்கள் காணாமலிருந்தும் அவரிடத்தில் அன்புகூருகிறீர்கள்" என்று கூறினார். பேதுருவின் வாசகர்களின் அத்தியாவசியத் தேவையாக இருந்தது சரியான உபதேசம் அல்ல.[7] கிறிஸ்து யாராக இருந்தார் என்பதையும் தங்களுக்கு அவர் என்ன செய்திருந்தார் என்பதையும் அவர்கள் அறிந்திருந்தனர் (2:21-25). கர்த்தர் மறுபடியும் வருவார் என்பதை அவர்கள் அறிந்திருந்தனர், மற்றும் அந்த நாள் வரும்வரையில் தாங்கள் எவ்வாறு வாழவேண்டும் என்பதையும் அவர்கள் அறிந்திருந்தனர். இவையாவையும் உண்மையாக இருக்கையில், கிறிஸ்துவின் இராஜ்யம் அவர்கள் மத்தியில் உணர்ந்தறியப்பட்டிருந்தது. அவர்கள் எவ்வளவாக ஒருவர் மற்றவர் மீது தவறாத அன்பை நடைமுறைப்படுத்தினரோ, அவ்வளவாய்க் கிறிஸ்துவின் ஆசீர்வாதங்களில் பங்கு பெற்றனர். விசுவாசிகள் ஒருவர்மீதொருவர் அழியாத அன்புகொண்டவர்களாக சரீரத்தில் (சபையில்) வாழும்போது, பரலோகத்தின் முன்சுவையானது உணர்ந்தறியப்படுகிறது. இயேசுவே கூட, "நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள்" என்று கூறியிருந்தார் (யோவான் 13:35).

பேதுரு, **அன்பு திரளான பாவங்களை மூடும்** என்று கூடுதலாகக் கூறினார். இந்தக் கூற்றின் அர்த்தம் முற்றிலும் தெளிவானதாக இருப்பதில்லை. மனிதகுலத்தின்மீது தேவனுடைய அன்பானது, அவர் கிறிஸ்துவை இரட்சகராக அனுப்பக் காரணமாக இருந்திருக்க வேண்டும் என்று பேதுரு

அர்த்தப்படுத்தி இருக்கலாம், நியாயத்தீர்ப்பின் நாளில் கிறிஸ்துவின் பாவநிவாரண பலியின் மூலமாக, தேவன் திரளான பாவங்களை மூடுவார்.[8] பேதுரு 4:2ல் பாவத்தைப் பற்றிய தமது குறிப்பைப் பின்பற்றி இருக்கலாம் என்ற இன்னொரு சாத்தியக்கூறும் உள்ளது. பாவம் பற்றிய விஷயத்தைக் கிறிஸ்தவர்கள் (தமது கடந்த காலத்தில்) போதிய அளவுக்குக் கொண்டிருந்தனர். 4:8ல் பேதுரு, கிறிஸ்துவுக்குள்ளான சகோதர சகோதரிகள் மீது கொள்ளும் அன்பு, ஒரு கிறிஸ்தவர் பாவத்தைத் தமக்குப் பின்னால் விட்டுச் செல்வதற்குத் தேவையான பலத்தைக் கொடுக்கும் என்று பேதுரு அர்த்தப்படுத்தி இருக்கலாம். அன்பு பாவங்களை மூடும் என்பது, ஒருவரின் வாழ்வில் இருந்து பாவம் துடைத்தெறியப்படும் என்ற கருத்தில் இருக்கலாம், அன்பின் நிமித்தமாக ஒருவர் தமது வாழ்வில் பாவத்திற்குத் தமது முதுகைத் திருப்பித் காண்பிக்க வேண்டியுள்ளது.[9] இவ்விரு விளக்கங்களுமே கருத்துடையவையாக இருக்கையில், இதைக் காட்டிலும் மேன்மையான வேறொரு விளக்கமும் உள்ளது. கிறிஸ்துவின் சமூகத்தில் விசுவாசிகள் ஒருவர் மீது மற்றவர் கொண்டுள்ள அன்பைக் காண்பிக்க வேண்டும் என்று அப்போஸ்தலர் புத்திகூறிய உடன் பின்பு இந்தக் கூற்று கூறப்பட்டுள்ளது. “அன்பு திரளான பாவங்களை மூடும்” என்ற கூற்றை விசுவாசிகள் மத்தியில் வெளிப்படுத்தப்பட வேண்டிய பரஸ்பர அன்பை விவரிக்கும் வழியாக எடுத்துக் கொள்ளுதல் மிகச்சிறப்பானதாக இருக்கிறது. நவீன காலக் கிறிஸ்தவர்களைப் போன்றே பேதுருவின் வாசகர்களும், ஒருவர் மற்றவரின் நடவடிக்கைகளை உற்றுநோக்குகையில், உபகார முடிவுகளின் தேவையைத் தங்களுக்குள் கண்டனர்.

மற்ற கிறிஸ்தவர்களின் தோழமையின்றி கிறிஸ்தவராக இருக்க வழியெதுவும் இல்லை. கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்தல் என்பது உள்ளாகவே சமூக அனுபவமாக உள்ளது. ஒருவர் மற்றவர் மீது தவறாத அன்பு காண்பித்தல் என்பதைக் காட்டிலும், கிறிஸ்து நம்மிடையே இருக்கிறார் என்பதை அதிகம் குறிப்புணர்த்துவதான வேறு எந்த பரீட்சையும் அநேகமாக இல்லை என்றே கூறலாம். மக்கள் எப்போதெல்லாம் ஒருவர் மற்றவருடன் நெருக்கமாக வாழ்கின்றனரோ, அப்போதெல்லாம் அவர்கள், ஒருவரிலொருவர் தங்களை எரிச்சல் மூட்டும் பண்புகளைக் காண்பார்கள் என்பதில் எவ்வித மாறுபாடான கருத்தும் இருப்பதில்லை. விசுவாசிகள் தங்கள் விசுவாசத்தைப் பகிர்ந்து கொள்ளும் மற்ற விசுவாசிகளிடத்தில் உள்ள இப்படிப்பட்ட எரிச்சல் மூட்டும் குணங்களைக் கையாள்வது எவ்வாறு? பேதுரு பின்வருமாறு பதில் தருகிறார்: “அன்பு திரளான பாவங்களை மூடும்.” சபையானது சமாதானத்தில், இசைவிணக்கத்தில் மற்றும் நற்சிந்தையில் வாழவேண்டும் என்றால், கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் “திரளான பாவங்களை” மூட வேண்டும்.

கிறிஸ்தவர்கள் ஒன்றுகூடியிருக்கையில், யாரேனும் ஒருவர் குற்றப்படுத்தப்படுவதாக உணராது இருக்கும் வேளை எதுவும் இல்லை என்றே கூறலாம். செம்மையற்ற, உணர்வற்ற நடத்தைக்குச் சாக்குப் போக்கு எதுவும் இருப்பதில்லை, இருப்பினும் குற்றப்படுத்தப்படுவதாக விரைவிலேயே எடுத்துக் கொள்ளுபவர்களும் உள்ளனர். இயேசுகிறிஸ்துவின் சபைக்குள், தங்கள் சட்டைக் கைகளுக்குள்ளாகத் தங்கள் உணர்வுகளை அணிந்து கொண்டிருப்பவர்களுக்கு இடம் இருப்பதில்லை. ஒவ்வொரு கிறிஸ்தவருமே

காலத்தைப் பொறுத்து, குற்றப்படுத்துபவராக அல்லது குற்றப்படுத்தப் பட்டவராக இருப்பார். வார்த்தைகள் தடைகள் எதையும் கட்டி எழுப்ப அனுமதிக்காமல், சிந்தனையற்ற வார்த்தைகளைக் கூறக் கிறிஸ்தவர்கள் ஒருவர் மற்றவரை அனுமதிக்கின்றனர். "உயர் பராமரிப்பு" கொண்ட கிறிஸ்தவர்கள் எப்போதுமே தொந்தரவாகவே உள்ளனர். தங்கள் தேவைகள் குறித்து ம ற்றவர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று நினைப்பவர்கள், மற்ற எவரொருவரின் பாவங்களையும் மூடத் தகுதியுள்ளவர்களாக இருப்பதில்லை. கிறிஸ்துவின் சமூகத்திற்குள் அன்பு என்பது "திரளான பாவங்களை மூடும்," ஏனென்றால், கிறிஸ்தவர்கள் தங்கள் திரளான பாவங்களை மூடும் வண்ணம ாகத் தங்கள் மீது அன்புகூர்ந்த ஒரு கர்த்தரைக் கொண்டுள்ளனர். மற்றவர்களில் உள்ள பலவீனங்கள், பக்குவப்பட்ட கிறிஸ்தவர்கள் ஒருவர் மீது மற்றவர் கொள்ளும் அன்பைக் குறைத்துப் போடுவதில்லை. அவர்கள் கர்த்தரிடத்தில் இருந்து தாங்கள் அனுபவித்துள்ள அதே மன்னிப்பு மற்றும் தயாள சிந்தையை, மற்றவர்களின் குறைபாடுகளை நோக்கிய தங்கள் எண்ணப்போக்கிலும் காண்பிப்பார்கள்.

கர்த்தருடைய மக்களுக்கான அவரின் ஆணைகளில் பெரும்பாலானவற்றில் உள்ளது போன்றே, "அன்பு திரளான பாவங்களை மூடும்" என்ற கூற்றும் தவறாகப் பயன்படுத்தப்படக் கூடும். விபசார உறவு கொண்டிருந்த ஒரு மனிதனைக் கொரிந்துவில் இருந்த சபையானது சகித்துக்கொண்டிருந்ததைப் பவுல் அறிந்தபோது, அவர் குற்றஞ்சாட்டுதல் எதுவுமின்றி, அன்பு திரளான பாவங்களை மூடும் என்பதால் அதைக் காணாமல் விடும்படி அவர்களுக்குக் கூறவில்லை (1 கொரிந்தியர் 5). பாவம் செய்யும் சகோதரர் அல்லது சகோதரியை எதிர்த்து நின்று மனந்திரும்பும்படி வலியுறுத்துதல் என்பது அன்பிற்குச் சிலவேளைகளில் தேவைப்படுவதாக உள்ளது. சிலவேளைகளில் அன்புக்குக் கடிந்து கொள்ளுதல் தேவைப்படுகிறது. ஞானமுள்ள சகோதரர் அல்லது சகோதரி அந்தக் கடிந்துகொள்ளுதலை இருதயத்தில் ஏற்றுக்கொள்வார். பேதுருவின் மேற்கண்ட கூற்றானது பாவம் செய்தலுக்கான அனுமதியாக ஒருக்காலும் எடுத்துக் கொள்ளப்படக் கூடாது.

**வசனம் 9.** பழங்கால மத்திய தரைக்கடல் பகுதி உலகத்தில், உபசரிப்பு என்பது உயர்வாக புகழப்பட்ட நெறியாக இருந்தது. இது புதிய ஏற்பாட்டில் திரும்பத் திரும்ப வருகிறது. ஆசீர்வதிக்கப் பட்டவர்கள் பற்றி இயேசு, "அந்நியனாயிருந்தேன், என்னைச் சேர்த்துக்கொண்டீர்கள்" என்று கூறினார் (மத்தேயு 25:35). சீமோனின் வறிய உபசரிப்பிற்காக அவரைக் கர்த்தர் கடிந்து கொண்டார் (லூக்கா 7:44-47). நள்ளிரவில் உபசரிப்பை நாடி வந்த நண்பர் பற்றிய உவமையை அவர் கூறினார் (லூக்கா 11:5-8). ரோமாபுரியில் இருந்த விசுவாசிகள் உபசரிப்பை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று பவுல் புத்திகூறினார் (ரோமர் 12:13). எபிரெயருக்கு நிருபத்தை எழுதி யவர், "அந்நியரை உபசரிக்க மறவாதிருங்கள்" என்று கூடுதலாகக் கூறினார் (எபிரெயர் 13:2). யோவானின் மூன்றாவது நிருபம் முழுவதுமே உபசரிப்புக் காண்பித்தல் பற்றியதாக உள்ளது, இவ்வார்த்தைகள் யாவற்றிற்கும் பேதுரு, **ஒருவரையொருவர் உபசரியுங்கள்** என்று பங்களித்தார். "ஒருவரையொருவர்" என்பதைப்பற்றி அப்போஸ்தலர், குறிப்பாக விசுவாசிகளைத் தமது சிந்தையில் கொண்டிருந்தார், ஆனால் உபசரிப்பு எல்லாருக்கும் விரிவாக்கப்பட

வேண்டியதாக இருந்தது.

அநேகமாக விசுவாசிகள் தங்கள் இல்லங்களில் ஒருவர் மற்றவரிடம் செயல்விளக்கப்படுத்த வேண்டிய சாதாரண கிறிஸ்தவ ஈகை குணத்தை அப்போஸ்தலர் தமது சிந்தையில் கொண்டிருந்து இருக்கலாம். அவர் அநேகமாக, தமது வாசகர்கள் மத்தியில் சமூக உறவை ஊக்குவித்திருக்கலாம். இருப்பினும், உபசரிப்பு என்பது சமூக விஷயங்களைக் காட்டிலும் அதிகமானவற்றைச் செய்ய வேண்டிய இருந்த வேளைகள் இருந்தன. சபைகளுக்குப் போதித்து அவர்களை உற்சாகப்படுத்துவதற்காக, பயணம் செய்யும் போதகர்களும் தீர்க்கதரிசிகளும் இருந்தனர். தேமேத்திரியு அப்படிப்பட்ட போதகர்களில் ஒருவராயிருந்தார் (3 யோவான் 12). பவுலும் அவரது உடன் ஊழியர்களும் அவர்களில் இருந்தனர். அவர்கள் ஊழியம் செய்த சபையின் ஆதரவும் ஊக்குவித்தலும் அவர்களுக்குத் தேவைப்பட்டது. கள்ளத் தீர்க்கதரிசிகளும் (1 யோவான் 4:1) கள்ள போதகர்களும் (2 பேதுரு 2:1) கூட இருந்தனர். அவர்களுக்கு உபசரிப்புக் காட்டுதல் என்பது அவர்களின் துர்க்கிரியைகளில் பங்கேற்றலாக இருந்தது (2 யோவான் 11).

உபசரிப்பு என்பது செல்வாக்கு மிக்க மேற்கத்தியக் கலாச்சாரத்தைக் காட்டிலும் பேதுரு இந்த நிருபத்தை யாருக்கு எழுதினரோ அந்த ஏழை மக்களுக்கு அதிகம் அவசியமானதாக இருந்தது. ஏழை விதவை இரண்டு காசுளைக் கொடுத்தல் அவளுக்கு அதிக கடினமாக இருந்தது போன்றே (மாற்கு 12:41-44), செல்வந்தர்கள் விலையுயர்ந்த கொடைகளைத் தருதலும் கடினமான விஷயமாக இருந்தது, அதிகமான செல்வங்களைக் கொண்டிருந்தவர்களைக் காட்டிலும் பேதுருவின் வாசகர்களுக்கு உபசரிப்பு காண்பித்தல் என்பது அதிகம் கடினமானதாக இருந்தது. இருப்பினும் மனதில் வெறுப்புணர்வுடன் கொடுத்தல் என்பது கொடுக்காமலே இருத்தலுக்குச் சமானமானதாக உள்ளது. **முறுமுறுப்பில்லாமல் கொடுக்கும்படி** பேதுரு தமது வாசகர்களுக்குக் கூறினார். கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் கொடுக்கும் போது, அவர்கள் தேவனுக்கென்று கொடுக்கின்றனர். தாராளமாகக் கொடுக்கக் கூடியவர்களாக இருத்தல் என்பது செல்வந்தர்களுக்கு மாத்திரமே முன்குறித்து வைக்கப்பட்டுள்ள ஈகைப்பண்பல்ல. ஏழைகளும்கூட தாராளமாகவும் சுயாதீனமாகவும் கொடுக்கலாம் (2 கொரிந்தியர் 8:1, 2).

**வசனம் 10.** பவுலைப் போன்று (ரோமர் 12:6-8; 1 கொரிந்தியர் 12:7-11; எபேசியர் 4:11) பேதுரு, தேவனிடத்தில் இருந்து விசுவாசிகள் பெற்றிருந்த பல்வேறு கொடைகளை அவர்களுக்கு நினைவூட்டுவதற்கு சந்தர்ப்பத்தைக் கண்டறிந்தார். தெய்வீக சக்தியினால் தனிநபர் தாம் பெற்றுக்கொண்டிருந்த **விசேஷித்த வரங்களைப்** பற்றி அப்போஸ்தலர் இவ்விடத்தில் பேசினார். இதே வார்த்தையைப் பவுல் 1 கொரிந்தியர் 12:4ல், பரிசுத்த ஆவியானவரால் தரப்படுவதாகத் தாம் குறிப்பிட்ட வரங்களைப் பற்றிக் கூறுவதற்குப் பயன்படுத்தினார். நோயாளிகளைக் குணமாக்குதல், பல்வேறு வகையான அற்புதங்கள் செய்தல் மற்றும் சாதாரண வழிமுறைகளின் மூலம் கற்றறிந்திராத மொழிகளில் பேசுதல் ஆகிய வரங்களைக் கிறிஸ்தவர்கள் கொண்டிருந்தனர். பவுலைப் போல் இல்லாமல் பேதுரு பரிசுத்த ஆவியானவரின் வரங்களைப் பற்றிக் குறிப்பிடவில்லை. ரோமர் 12:6ல் பவுல் இதே வார்த்தையைப் பயன்படுத்தியும் பரிசுத்த ஆவியானவரைப் பற்றிக் குறிப்பிடவில்லை. ரோமர்

12:6-8ல் உள்ள, தீர்க்கதரிசனம் போன்ற சில கொடைகள் இயற்கைக்கு அப்பாற்பட்டவையாகத் தோன்றுகின்றன, அதே வேளையில், உபசரித்தல் மற்றும் போதித்தல் போன்ற மற்றவை இயற்கையான ஈவுகளாகத் தோன்றுகின்றன. நமக்கு முன்பாக உள்ள வசனப்பகுதியில், ஒருவருடைய கொடையானது சாதாரண இயற்கையான ஈவாக இருப்பதாகத் தோன்றுகிறது, இவ்விஷயத்தில் பேசுதல் அல்லது உபசரித்தல் பற்றிக் கூறப்படுகிறது. **அவனவன் பெற்ற** என்ற வார்த்தைகளில் அப்போஸ்தலர், தாம் குறிப்பிட்ட இரண்டு வரங்கள் தமது வாசகர்கள் கொண்டிருந்த வெவ்வேறு திறன்களில் சில என்று கருத்துத் தெரிவித்தார்.

பேதுருவோ அல்லது பவுலோ, இயல்பான ஈவுகளுக்கும் ஆவியானவரால் தரப்பட்ட இயற்கைக்கு மேலான கொடைகளுக்கும் இடையில் சுலபமாகப் பகுத்தறியும் வித்தியாசத்தை வரைந்திருக்க வாய்ப்பில்லை. வரங்களைப் பயன்படுத்துதலில் ஒருவரின் பொறுப்பு என்ற விஷயம் வரும்போது நிச்சயமகவே அங்கு எந்த வித்தியாசமும் இருப்பதில்லை. ஒருவர் எந்தத் திறன்களைக் கொண்டிருந்தாலும், அவைகள் தேவனால் தரப்பட்டவையாக உள்ளன மற்றும் அவை தேவனுடைய மகிமைக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும். தேவனை மகிமைப்படுத்த அவற்றைப் பயன்படுத்துதல் என்பது, **ஒருவருக்கொருவர் உதவிசெய்ய** அவற்றைப் பயன்படுத்துதல் என்பதாக உள்ளது என்று பேதுரு கூறினார், "அவனவன் பெற்ற வரத்தின்படியே" அவரவர் அதைப் பயன்படுத்த வேண்டியுள்ளது. இயேசு போதித்தபடி (மத்தேயு 10:8), அவர் (விசுவாசி) இலவசமாய்ப் பெற்றபடியால் இலவசமாய்க் கொடுக்க வேண்டியுள்ளது.

இயற்கையான திறன்கள் தேவனால் கிறிஸ்தவர்களுக்கு ஒப்புவிக்கப்பட்டுள்ளதால், அவர்கள் **நல்ல உக்கிராணக்காரர்போல** அவற்றைப் பயன்படுத்த வேண்டும் என்று பேதுரு கூறினார். லூக்கா 16:1-9ல் இயேசு, ஒரு "உக்கிராணக்காரனை" கொண்டிருந்த செல்வந்தர் பற்றிய உவமையொன்றைக் கூறினார், அந்த உக்கிராணத்காரனிடத்தில் அவர், பெரிய பொறுப்பைக் கொடுத்திருந்தார். இங்கு உக்கிராணக்காரன் என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள *oikonomos*, என்ற அதே வார்த்தைதான், 1 பேதுரு நிருபத்திலும் (4:10) "உக்கிராணக்காரர்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. உக்கிராணக்காரர் என்பவர் (வழக்கமாக இவர் ஒரு அடிமையாக இருப்பார்) செல்வந்தர் ஒருவருடைய சகல செல்வத்திற்கும் பொறுப்பாளராக வைக்கப்பட்டார். உக்கிராணக்காரர் என்பவர், மேலாண்மை செய்பவராக இருக்கிறார், ஆனால் இவ்வார்த்தை கணக்கு ஒப்புவித்தலையும் மறைமுகமாகக் குறிப்பிடுகிறது. பேதுருவின் வாசகர்கள் தங்கள் வசமாய் ஒப்புவிக்கப்பட்டுள்ள விஷயங்களைப் பொறுப்புடன் மேலான்மை செய்ய வேண்டும் என்று அவர் விரும்பினார். கிறிஸ்தவர்களின் பொறுப்பாக இருந்த இயற்கையான ஈவுகளைத் தேவன் கிறிஸ்தவர்களிடத்தில் ஒப்புவித்திருந்தார். அவர்கள் தேவன் தங்களிடம் ஒப்புவித்தவற்றைப் பயன்படுத்தும் வழி பற்றி கணக்கு ஒப்புவிக்க வேண்டியவர்களாக இருந்தனர். அப்போஸ்தலர், தமது வாசகர்கள் தங்கள் கொடைகளை ஞானமாகப் பயன்படுத்த வேண்டும் என்று புத்தி கூறினார்.

கிறிஸ்தவர்களின் தொகுப்பான இயற்கையான ஈவுகளைப் பேதுரு, தேவனுடைய **பற்பல கிருபையுள்ள ஈவுகள்** என்று அழைத்த விஷயம்

ஆர்வத்திற்குரியதாக உள்ளது. "கிருபை" என்பது, மனித குலத்திற்குத் தேவன் தமது நல்ல வரங்களைத் தரும் பலவகையான வழிகள் யாவற்றிற்கும் ஒரு குடைச் சொற்றொடாராக உள்ளது. பவுலைப் பொறுத்தமட்டில் கிருபை என்பது இரட்சிப்பு உணர்ந்தறியப்பட்ட வழிமுறையாக இருந்தது (எபேசியர் 2:8). இயேசு கிறிஸ்துவின் வெளிப்படுதல் தேவனுடைய கிருபையின் உச்சபட்சமான உணர்ந்தறிதலாக இருந்தது என்று பேதுரு கூறினார் (1:13). கர்த்தர் மறுபடியும் வருமளவும், அவர் தமது மக்களுக்குத் தயவு செய்வதற்குப் பயன்படுத்தும் ஆசீர்வாதங்களின் பரந்த வரிசையில் தேவனுடைய கிருபை உணர்ந்தறியப்படுகிறது. தேவனுடைய வசனத்தை ஒருவர் பேசுகிறபோதோ அல்லது அவர் தமது அயலகத்தவருக்கு சேவை செய்கிறபோதோ, அவர் தேவனுடைய கிருபை வரங்களை அனுபவித்து அவற்றைப் பொறுப்புடன் பயன்படுத்துகிறார். சபையை ஒரு சரீரமாக, ஒவ்வொரு உறுப்பினரும் அந்த சரீரத்தின் மற்ற உறுப்பினர்களால் மகிழ்வுடன் அனுபவிக்கப்படும் வரங்களில் மகிழ்வு அடைபவராக இருக்கும் வகையிலான ஒப்புவமையைப் பேதுரு மேம்படுத்தி வளர்க்காது இருக்கையில், ஒருவேளை அது இவ்விடத்தில் மறைமுகமாக உணர்த்தப் பட்டிருக்கலாம். வரங்கள் பலவகைப்படும். எந்த ஒரு கிறிஸ்தவரும் மற்றொருவரால் மகிழ்வுடன் அனுபவிக்கப்படும் வரங்கள் பற்றிப் பொறாமை அடையக்கூடாது அல்லது தமது சொந்த வரத்தைப் பழித்துரைக்கக் கூடாது.

**வசனம் 11.** பேதுரு **ஒருவர் போதித்தால்** என்று எழுதியபோது, தேவனுடைய குடும்பத்திற்குள் பேசுதலுக்கான விசேஷித்த ஊழியம் ஒன்று இருந்ததை அவர் மறைமுகமாக உணர்த்தினார். பெரும்பான்மையான மக்கள் பேசும் திறன் கொண்டிருக்கிறோம் ஆனால் எல்லாருமே சபைக்குத் தங்கள் பேச்சு மூலம் நன்கு ஊழியம் செய்யக்கூடியவர்களாக இருப்பதில்லை (காண்க யாக்கோபு 3:1). முந்திய வசனத்தில் அப்போஸ்தலர், கிறிஸ்தவர்களுக்குரிய வரங்கள் வேறுபடுகின்றன என்பதைத் தெளிவுபடுத்தியிருந்தார். ஒருவர் பேசுதலுக்கான இயற்கையான வரத்தைக் கொண்டிருக்கும்போது, அவர் அதைப் பயன்படுத்த வேண்டும். தேவனுடைய வசனத்தைப் பகிரங்கமாக அறிவித்தல் என்பதே பேதுரு தமது சிந்தையில் கொண்டிருந்த பேச்சு என்பதாக இங்கிருக்கலாம். ஒருவேளை அவர், சபை கூடிவந்திருக்கும்போது அதற்கு முன்பாக நின்று அறிவித்தல் என்பதைத் தமது சிந்தையில் கொண்டிருந்து இருக்கலாம். பேசும் சாதனை செய்பவர்கள் அதை **தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன்** என்பதோடு இணைக்க வேண்டிய பொறுப்பு உள்ளதை உணர்ந்தறிய வேண்டும் என்று அப்போஸ்தலர் விரும்பினார்.

"வாக்கியங்கள்" *(logia)* என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை, தேவனுடைய கூற்றுக்களையே சாதாரணமாகக் குறிக்கிறது. நடபடிகள் 7:38 மற்றும் ரோமர் 3:2 ஆகிய வசனங்களில், இவ்வார்த்தை பழைய ஏற்பாட்டிற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. சபைக்கு முன்பாகப் பேசுபவர் எடுத்துரைக்கும் வார்த்தைகள், வேதாகமத்தின் வார்த்தைகளுடைய அதிகாரத்திற்கும் வல்லமைக்கும் சமமானவை அல்ல. இருப்பினும், கிறிஸ்தவ போதகர்கள் மற்றும் சுவிசேஷ ஊழியர்கள் ஆகியோரால் பேசப்படும் வார்த்தைகள் தேவனுடைய வெளிப்படுத்துதலில் இருந்தே தரவழைக்கப்படுகின்றன,

அவைகள் வெளிப்படுத்துதலின் பண்புகளையே தமக்குள் பங்கேற்றுக் கொள்கின்றன. கிறிஸ்தவப் பேச்சாளர்கள், தங்கள் பொறுப்புக்களின் ஈர்ப்பை உணர்ந்தறிய வேண்டும் என்று பேதுரு வேண்டிக் கேட்டுக்கொண்டார். அவர்கள் பேசுகையில், அவர்களின்வார்த்தைகள் அப்போஸ்தலிக்கச் செய்தியோடு சபையைக் கட்டி எழுப்பும் வகையில் அவர்கள் தங்கள் வார்த்தைகளைக் கவனமாய்ப் பயன்படுத்த வேண்டும் என்று அவர் விரும்பினார்.

சரீரத்தைக் கட்டியெழுப்பக் கிறிஸ்தவர்கள் பயன்படுத்தும் பல்வகை வரங்களைப் பற்றிய பவுலின் பட்டியல்கள், பேதுருவினுடையதைக் காட்டிலும் அதிக விபரமாக இருக்கின்றன. பேதுரு இரு பெரிய தலைப்புகளாக பேசுதல் மற்றும் உதவி செய்தல் ஆகியவற்றை மாத்திரமே குறிப்பிட்டார். இருப்பினும் அவை ஒவ்வொன்றின்கீழும், அந்த வரங்கள் வெளிப்படுத்தப்படுவதற்கான குறிப்பிட்ட வழிகள் ஏராளமாக வருகின்றன. பேசுதல் என்பதில் வெளியரங்கமான அல்லது தனிப்பட்ட உபதேசம், பிரசங்கித்தல், ஊக்குவித்தல், ஜெபம் மற்றும் ஒருவேளை பாடுதல் ஆகியவை உள்ளடங்கலாம். உதவி செய்தல் என்பது செயல் பரப்பெல்லையில், பேசுதலைக் காட்டிலும் அதிக விரிவானதாக உள்ளது. அப்போஸ்தலர், **ஒருவன் உதவிசெய்தால் தேவன் தந்தருளும் பெலத்தின்படி செய்யக்கடவன்** என்று எழுதினார். உதவிசெய்தல் என்பதைப் பவுல், கொடுத்தல் மற்றும் இரக்கம் செய்தல் என்பது போன்ற இருவிஷயங்களாகப் பிரித்தார் (ரோமர் 12:8), ஆனால் உதவிசெய்தல் என்பது ஒருவர் கிறிஸ்துவைப் போலச்செய்தலில் விஷயங்களின் மாபெரும் வகையை உள்ளடக்கியதாக இருக்கும். இயேசு மாபெரும் நியாயத்தீர்ப்புக்காட்சியை மத்தேயு 25:31-46ல் முன்வைத்தபோது, பசியோடிருந்தவர்களுக்கு உணவளித்தவர்கள், நோயாளிகளைச் சந்திக்கச் சென்றவர்கள், நிர்வாணிகளை உடுத்துவித்தவர்கள் ஆகியோரைப் பற்றிக் குறிப்பிட்டார். உதவிசெய்தல் என்பது தரையைக் கூட்டுதல் போன்ற அடிநிலை விஷயமாகவோ அல்லது வேதசாட்சியாக மரித்தல் என்ற வகையில் காட்சிப்படுத்தும் விஷயமாகவோ இருக்கலாம்.

ஒருவர் எதைச் செய்தாலும், அது பேசுதலோ அல்லது உதவிசெய்தலோ எதுவாக இருந்தாலும், அவர் தமது ஊழியத்திற்கான ஆதாரவளத்தைத் தேவனுடைய கிருபையுள்ள கொடுத்தலில் கண்டடைகிறார். அவரது பேசுதல் தேவனுடைய செய்தியின்படியானதாக இருக்க வேண்டும்; அவரது உதவிசெய்தல் "தேவன் தந்தளும் பெலத்தின்படி" இருக்க வேண்டும். தேவன் தமது மக்களுக்குக் கட்டளையிடுவதோடு, அவர்களைப் பலப்படுத்தவும் செய்கிறார். தேவன் பலத்தைக் கொடுக்கிறார். வேறொரு இடத்தில் பவுல், "எவ்விடத்திலும் எல்லாவற்றிலும் திருப்தியாயிருக்கவும் பட்டினியாயிருக்கவும், பரிபூரணமடையவும் குறைவுபடவும் போதிக்கப்பட்டேன். என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு" என்று எழுதினார் (பிலிப்பியர் 4:12ஆ, 13). ஒரு விசுவாசி மகிழ்வுடன் அனுபவிக்கும் வரங்கள் அவரது சொந்த மகிமைக்கானவை அல்ல. ஒருவர் **"தேவனுடைய வாக்கியங்களின்படி"** போதிக்கும்போது மற்றும் அவர் **"தந்தளும் பெலத்தின்படி"** உதவிசெய்யும்போது, **எல்லாவற்றிலேயும் இயேசுகிறிஸ்துமூலமாய்த் தேவன் மகிமைப்படுதல்** என்பதே விளைவாக இருக்க வேண்டும். குமாரன் மூலமாகச் செய்யப்படாத எதிலும் தேவனு

க்குத் துதி, மகிமை தரப்படுவதில்லை. "என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" என்று இயேசு கூறினார் (யோவான் 14:6; காண்க நடபடிகள் 4:12).

பேதுரு தமது நிருபத்தின் இந்தப் பகுதியை ஒரு துதிப்பாடலுடன் முழுமையாக்கினார். இது வழக்கமற்றதாக உள்ளது ஆனால் எதிர்பாராதது அல்ல. ஒரு நிருபத்தின் மத்தியில் இப்படிப்பட்ட துதியைப் காண்பது வழக்கமானதே ஆகும். துதிகள் குறுகியவையாக, தேவனுக்குத் துதியில் முறைப்படியான சொல்விளக்கங்களாக உள்ளன. அவைகள் அடிக்கடி, அந்தக் கணத்தினால் உருவாக்கப்பட்ட ஆற்றலின் அரை உடனடியான வெளிப்படுதலாகக் காணப்படுகின்றன. அவைகள் கணிசமான அளவு வேறுபாட்டை அனுமதிக்கையில், அவைகள் தேவனுடைய மகிமை, வல்லமை மற்றும் நெறிமுறை ஆகியவற்றின் மீது கவனம் குவிக்கும் பண்பைப் பகிர்ந்து கொள்கின்றன. சங்கீதங்களில் இவைகள் பொதுவாக உள்ளன, ஆனால் இவைகள் வேதாகமம் முழுவதிலும் காணப்படுகின்றன. துதிப்பாடல்கள் குறிப்பாக, ஒரு நிருபத்தின் முடிவுப்பகுதிக்கு ஏற்புடையவையாக உள்ளன, அப்பகுதியில் அதனை எழுதியவர் தமது நிருபத்தை முடிவுக்குக் கொண்டு வருகிறார் (ரோமர் 16:27; பிலிப்பியர் 4:20; 1 தீமோத்தேயு 6:15, 16; 1 பேதுரு 5:11; 2 பேதுரு 3:18; யூதா 24, 25). இருப்பினும் சில வேளைகளில் துதிகள், ஒரு எழுத்தாளர் தமது நிருபத்தை முடிவுக்கும் முன்னரே நன்கு எழும்புகின்றன (ரோமர் 11:36; எபேசியர் 3:21). பேதுரு தமது நிருபத்தில் துதிப்பாடல் ஒன்றைக் கொண்டிருக்க வேண்டும் என்பது எதிர்பாராததாக உள்ளது, ஆனாலும் இது முன்னுதாரணம் எதுவும் இல்லாதது அல்ல. இருப்பினும் குறிப்பிட்ட இந்த இடத்தில் இத்துதிப்பாடலை வைத்திருத்தலானது 1 பேதுரு நிருபத்தைப் பற்றி எழும்பி இருக்கும் இன்னொரு கேள்விக்குப் பங்களிக்கிறது.

*அறிமுக உரையில்* நாம் கவனித்தபடி, 1 பேதுரு நிருபமானது அப்போஸ்தலரிடம் இருந்து கிடைக்கப்பெற்ற நிருபத்தைக் காட்டிலும் சற்றே வேறுபட்டதாகத் தொடங்கிற்று. இது ஒரு நிருபமாக இருப்பதற்கு முன்னர், இந்தப்பதிவேடு, ஞானஸ்நானம் பெற விரும்புபவர்களுக்கு அல்லது புதிதாய் ஞானஸ்நானம் பெற்றவர்களுக்கு ஒரு அறிவுறுத்துதல் கையேடாக இருந்தது என்ற கருத்தைக் கொண்டுள்ளனர். இந்த ஞானஸ்நானக் கையேட்டை இரண்டாம் நூற்றாண்டு சபையானது ஒரு நிருபப் படிமுறையாக்கி தழுவியமைத்தது என்பதே விவாதமாக உள்ளது. இது மிகப்பரவலாகப் படிக்கப்படும்படிக்கு அவர்கள் அதில் பேதுருவின் பெயரை இட்டனர். இந்த நிலைப்பாட்டைப் பராமரிக்கும் சிலர், 1 பேதுரு 4:12-5:14 வசனப்பகுதியானது, ஞானஸ்நானக் கையேட்டுடன் பிற்காலத்தில் இணைக்கப்பட்ட உண்மையான நிருபமாக உள்ளது என்று விவாதித்துள்ளனர். விஷயம் அவ்வாறு இருந்தால், 1 பேதுரு என்று நாம் அழைக்கும் பதிவேடு உண்மையில் இரண்டு தனித்தனிப் பதிவேடுகளாகத் தோற்றம் பெற்றன, அவற்றில் முதலாவது ஞானஸ்நானம் பெற்றுக்கொள்பவர்களுக்கான அறிவுறுத்துதல் பதிவேடு ஒரு நிருப வடிவத்திற்கு மெல்லியதாகத் தழுவப்பட்டது (1:3-4:11) மற்றும் இரண்டாவது உண்மையிலேயே ஒரு நிருபமாக இருந்தது (4:12-5:14). இவ்விதமான விவாதமானது இந்தப் பதிவேட்டின் எந்தப்பகுதியும் பேதுருவினாலேயே எழுதப்பட்டன என்ற உரிமைகோருதலை நீக்கிப் போடுகிறது.

இந்தக் கோட்பாட்டை மறுப்பதற்கு காரணங்கள் உள்ளன (இந்தப் புத்தகத்தின் தொடக்கத்தில் உள்ள *அறிமுகம்* என்ற பகுதியில் காணவும்). இருப்பினும் இன்னமும், இவ்விடத்தில் இந்தத் துதிப்பாடல் காணப்படுதலானது இந்த நிருபத்தின் ஒருமைப்பாடு பற்றி கேள்விகளை எழுப்புகிறது. மற்றும் 4:12ல் பேதுரு, கிறிஸ்தவரின் உபத்திரவங்களைப் பற்றிய கேள்வியைப் புதுப்பிக்கப்பட்ட அவசரத்தன்மையுடன் மேல் எடுத்தார் என்பது தெளிவாக உள்ளது. நிருபத்தின் இந்த அம்சங்களை விளக்கப்படுத்த இரண்டு தனித்தனிப் பதிவேடுகள் தேவை என்று யூகித்தல் அரிதாகவே அவசியமாக உள்ளது. பேதுரு தமது ஊக்குவிக்கும் முயற்சிக்கு மத்தியில் துதிப்பாடல் வடிவில் ஒரு துதியைச் செலுத்தச் சற்றே இடைநின்றிருக்கலாம். ஒருவேளை அவர், தமது நிருபத்தை எழுதச் சிலமணி நேரங்கள் அல்லது சில நாட்கள் கழித்துத் திரும்பி இருக்கலாம், அப்போது அவர் தமது வாசகர்களின் உபத்திரவங்கள் மீது திரும்பவும் தமது கவனத்தைச் செலுத்தி இருக்கலாம். இப்படிப்பட்ட செயல்முறையானது திட்டவட்டமாகவே, கற்பனைக்கு அப்பாற்பட்டதல்ல.

1 பேதுரு நிருபம் இரண்டு தனித்தனிப் பதிவேடுகளாகத் தோன்றியது என்ற அடிப்படை முடிவை மீண்டும் வகைப்படுத்தாமலே, 4:11 மற்றும் 4:12 ஆகிய வசனங்களுக்கிடையே தொனியில் எதிர்பாராத மாற்றம் உள்ளது என்பதை நாம் ஒப்புக்கொள்ளலாம். அப்போஸ்தலர் இந்த இடத்தில் தம் நிருபத்தை முடிக்கும் மனவிருப்பம் கொண்டு இந்தத் துதிப்பாடலை எழுதியிருக்கலாம். அவர் நிருபத்தைப் பக்கமாக வைத்துவிட்டு, அடுத்துக் கிடைக்கும் செய்திகொண்டுசெல்பவர் மூலமாக அதை அனுப்ப மனவிருப்பம் கொண்டிருந்து இருக்கலாம். ஒருசில நாட்கள் அல்லது ஒருசில வாரங்கள் கடந்திருக்கலாம். இதே வேளையில் பேதுரு அந்த நிருபத்தை அனுப்பும் வாய்ப்பை பெறுமுன்னர், தமது வாசகர்களின் உபத்திரவ நிலை பற்றிக் கூடுதல் தகவல்களைப் பெற்றிருக்கலாம். ரோமாபுரியில் இருந்த கிறிஸ்தவர்களின் ஆபத்து நிறைந்த சூழ்நிலைகள் மிகமோசமானவையாக மாறியிருக்கலாம். கிறிஸ்தவர்கள் மீது நீரோவின் வெறுப்பு அல்லது ஒருவேளை பவுல் மரணதண்டனைக்கு உட்பட்டது என்பது, பேதுருவின் வாசகர்களின் உபத்திரவம் மிகமோசமானதாக மாறிற்று என்று பேதுரு நம்புவதற்குக் காரணத்தைக் கொடுத்திருக்கலாம் என்று ஆன்ட்ரூ F. வால்ஸ் அவர்கள் கருத்துத் தெரிவித்தார். பிந்திய ஒரு வேளையில் அப்போஸ்தலர் அமர்ந்து 4:12-5:14 பகுதியைப் புதிய தகவல்கள் மற்றும் வளர்ச்சிகள் ஆகியவற்றிற்குப் பதிலுரையாகக் கூட்டியிருந்தார் என்றால், அது பின்தொடரும் வசனங்களில் உத்தேசிக்கப்படும் அவசரத்தன்மைக்குக் காரணமாயிருக்கும்.[10]

## நடைமுறைப்பயன்பாடு

### கருத்துநோக்கின் விஷயம் (4:7-11)

உள்ளூர் ஆரம்பப் பள்ளி பெண் ஆசிரியர் ஒருவர் ஒருநாள் பணிமுடிந்து வீடு சென்றுகொண்டு இருந்தார். அவர் தன்னுடன் ஐந்து வயதான தனது மகளான சிறுமியுடன் சென்று கொண்டிருந்தார். பக்கத்துத் தெருவில் இருந்து வந்த ஒரு வாகனம் கனவேகத்தில் வந்து, நிறுத்தும் கோட்டின்மீது ஓடி அந்தப் பெண் ஆசிரியரின் விலாப்பக்கத்தில் இடித்து, அவர்

*உடனடியாகக் கொல்லப்பட்டார். அந்தச் சிறுமி மிகமோசமான நிலையில் மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்டாள். நிறுத்தும் கோட்டின்மீது ஓடிய அந்த வாகனம் பதினெட்டு வயதான ஒரு பையனால் ஓட்டப்பட்டது. அந்தக் காரில் நான்கு இளைஞர்கள் இருந்தனர், ஏராளமான சாராயத்தைக் காவல்துறையினர் கண்டுபிடித்தனர்.*

*இப்படிப்பட்ட விபரங்களை நாம் வாசிக்கும்போது - கவலை, சீற்றம் குழப்பம், உதவியற்ற நிலை, கோபம் போன்ற - பல உணர்வுகள் நம்மில் பெரும்பான்மையானவர்களின் சிந்தனையில் பெருக்கெடுக்கின்றன. அந்தச் சிறுமியைத் தாயற்றவளாக விட்டுச்செல்ல நேர்ந்த, ஒன்றுமறியாத இப்பெண்ணின் கருத்தறிவற்ற மரணத்திற்குக் காரணமானது யாரோ அவர் மீது சட்டம் தனது கடமையைச் செய்ய வேண்டும் என்று நாம் விரும்புகிறோம் - அவர் தமக்கு உரிய தண்டனையைப் பெற வேண்டும். அதற்குக் காரணமானவர்கள் நீண்டகாலம் சிறையில் அடைக்கப்படப் பாத்திரராக உள்ளனர்.*

*இந்த விபத்து நடந்து சில மணிநேரம் கழித்து, நகரின் வேறொரு இடத்தில் ஒரு காட்சி அரங்கேறுகிறது. ஒரு தாயும் தகப்பனும் இருந்த வீட்டின் கதவு தட்டப்படுகிறது. தட்டியது காவல்துறையினர். அவர்களின் மகனோ அல்லது மகளோ நிறுத்துக்கோட்டின்மீது ஓடியிருந்ததை அவர்கள் அறிந்தனர். விளைவுகள் பரிதாபகரமானவையாக இருந்தன. சாராயம் உள்ளடங்கியிருந்தது. ஒரு இளம் தாய் மரித்துப்போயிருந்தாள்.*

*இந்த விபத்து கருத்துநோக்கைச் சார்ந்து மாறுபட்டுக் காணப்படுகிறது. இந்த மூன்று மனிதர்களும் இந்நிகழ்வினை எவ்வாறு கருதுவார்கள் என்று கற்பனை செய்து பாருங்கள்: (1) ஒரு கணவர் தமது மனைவியும் சிறுமியான மகளும் வீடு திரும்புவார்கள் என்று காத்திருக்கிறார், (2) தங்கள் காரின் சாவியை பதினெட்டு வயதான தங்கள் மகனிடம் கொடுத்திருந்த பெற்றோர் மற்றும் (3) நான், காலைச் செய்தித்தாளில் விபத்து பற்றிய செய்தியை புதிரான மனதுடன் வாசித்துக்கொண்டு, அவநம்பிக்கையுடன் தலையை அசைத்துக் கொண்டிருக்கிறேன். ஒருவர் எவ்வாறு ஈடுபடுகிறார் என்பதைப் பொறுத்து ஒரே செய்தி மாறுபட்ட வகையில் காணப்படுகிறது.*

*1 பேதுரு 4:7-11ல் அப்போஸ்தலரின் செய்தி கருத்து நோக்குப் பற்றியதாக உள்ளது. பேதுருவின் முதல் வாசகர்கள் உபத்திரவத்தை மிகுதியும் சகித்திருந்தனர். அவர்கள் கிறிஸ்துவைக் கர்த்தர் என்று அறிக்கையிட்டபின், அவர்களின் வாழ்வை, அவர்களது முன்னாள் நண்பர்களும் அயலகத்தவர்களும் மிகவும் பரிதாபமாக்கி விட்டனர். அவர்களின் நண்பர்கள் புரிந்துகொள்ளவில்லை. முதலாவது அவர்கள் சீற்றம் கொண்டிருந்தனர், பின்பு அவர்கள், யூதர்களில் பலஸ்தீனத்தில் இருந்து அறிமுகப்படுத்தப்பட்ட இந்தப் புதிய தேவனை ஏளனம் செய்தனர். அவர்கள் கிறிஸ்தவர்களின் வாழ்வைப் பரிதாபமாக்கினர். அவர்கள் அறிந்த யாவும் உண்மையாக இருந்தன என்று பேதுரு கூறினார்: "அந்தத் துன்மார்க்க உளையிலே அவர்களோடேகூட நீங்கள் விழாமலிருக்கிறதினாலே அவர்கள் ஆச்சரியப்பட்டு, உங்களைத் தூஷிக்கிறார்கள்" (1 பேதுரு 4:4).*

*பேதுரு தமது வாசகர்களை, அவர்களின் வேதனையையும் புறக்கணிக்கப்படுதலையும் கருத்து நோக்கில் வைக்கும்படி வேண்டிக் கேட்டுக்*

கொண்டார். கிறிஸ்தவர்கள் அந்நியர்களின் கருத்துநோக்கில் நிகழ்வுகளைக் கண்ணோக்குகின்றனர். உலகத்தின் அக்கறை மற்றும் கவலைகள் மற்றவர்களில் இருந்து மாறுபட்டவைகளாகக் கிறிஸ்தவர்களுக்குத் தெரிகின்றன. உலகத்தின்மீது அன்புகூருபவர்கள் இந்த யுகத்தைச் சார்ந்துள்ளனர்; கிறிஸ்தவர்களோ கடந்து செல்பவர்களாக மாத்திரமே இருக்கின்றனர். மனிதகுலத்தின் எஞ்சியுள்ள பிரிவினர் அறியாதவற்றை அவர்கள் அறிந்துள்ளனர்.

(1) *"எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று" என்பதால்* (1 பேதுரு 4:7), *கிறிஸ்தவக் கருத்துநோக்கு மாறுபட்டுள்ளது.* அப்போஸ்தலர், "ஏதாவது ஒரு வேளையில், எப்போது என்று நாம் அறியாத வேளையில், ஆனால் கர்த்தர் மறுபடியும் வருவார். இது அவ்வளவு அவசரமல்ல. நாம் இதை மனதில் இருந்து வெளியேற்றிவிட்டு நமது வேலையைப் பார்க்கச் செல்வோமாக" என்று எழுதவில்லை. கர்த்தர் சீக்கிரம் திரும்பி வருவார் என்ற விசுவாசத்திற்கும் அவர் திரும்பி வருவார் என்பதை சாவகாசமாக ஏற்றுக்கொள்வதற்கும் இடையில் மாபெரும் வேறுபாடு உள்ளது. அப்போஸ்தலரும் அவரது வாசகர்களும் முன்னெதிர்நோக்குதலில் வாழ்ந்தனர். கர்த்தர் திரும்பவும் வருதல் என்பது தேவையற்றவைகளைப் போட்டுவைக்கும் இடத்தில் தள்ளப்படத்தக்க பாடக்கருத்தல்ல.

எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிருக்கிறது என்பது புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களின் பொதுவான கண்ணோக்கக் கருத்தாக உள்ளது; "நீங்களும் நீடிய பொறுமையோடிருந்து, உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துங்கள்; கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறதே" (யாக்கோபு 5:8); "மனுஷகுமாரன் வரும் நாளையாவது நாழிகையையாவது நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள்" (மத்தேயு 25:13). கர்த்தருடைய மறுவருகையானது தங்கள் உடனடியான எதிர்காலத்தில் நிகழும் என்று கிறிஸ்தவர்கள் விசுவாசிக்கும்போது, அவர்கள் வேறுவகையில் வாழ்கின்றனர். பேதுரு இதைத்தான் இங்கு கூறினார். கர்த்தர் மறுபடியும் வருவார் என்று விசுவாசிப்பதற்கும் அவர் விரைவில் மறுபடியும் வருவார் என்று விசுவாசிப்பதற்கும் இடையில் வேறுபாடு உள்ளது.

கர்த்தர் மறுபடியும் வருவார் என்று எல்லா மக்களும் விசுவாசிப்பதில்லை. சிலர் தாங்கள் அறிந்துள்ள இந்தப் பொருளாதாய உலகம் மாத்திரமே என்று நம்புகின்றனர். பொருளாதாயவாதிகள், பொருளும் இயக்கமுமே இந்த அண்டத்தில் உள்ள யாவுமாகும் என்று நம்புகின்றனர். அவர்கள் தாங்கள் நம்புவதை சீர்பொருத்தமாகப் பின்பற்றினால், தாங்கள் சொந்த இருப்பிற்குப் பின்வரும் இரண்டு சாத்தியமான வழிகளில் ஏதாவது ஒன்றில் பதில் செயல் செய்வர். (1) சில பொருளாதாயவாதிகள் திரிந்த நிலை கொண்டவர்களாக உள்ளனர். வாழ்வு என்பது ஒரு பிரபஞ்ச நகைச்சுவை-யாக உள்ளது. அது ஒருவர் தமக்காக விரும்பி ஏங்கும் சிறு விஷயங்கள் தவிர வேறு அர்த்தம் எதையும் கொண்டிருப்பதில்லை. (2) மற்றவர்கள் குறைகாணும் இயல்பு கொண்டவர்களாக உள்ளனர். "புசிப்போம் குடிப்போம், நாளைக்குச் சாவோம்" (1 கொரிந்தியர் 15:32) என்பதே அவர்களின் தத்துவமாக உள்ளது. நாம் எவ்வளவு கேளிக்கைகளைக் கொண்டிருக்க முடியும் என்பதைக் கொண்டே வாழ்வின் வெற்றி அளவிடப்படுகிறது.

பேதுருவைப் பொறுத்தமட்டில், திரிந்தமனநிலை கொண்டிராத நிலையில் வாழ்வு என்பது அக்கறை கொள்ள வேண்டியதாக உள்ளது; இது அற்ப

சிந்தையற்ற நிலையில் சந்தோஷமானதாக உள்ளது. கர்த்தர் இந்த உலகத்தை நியாயந்தீர்க்கத் திரும்பவும் வருகிறார் என்பதால், அப்போஸ்தலர் "தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள்" என்று கூறினார். நாம் என்ன கூறுகிறோம் மற்றும் என்ன செய்கிறோம் என்பதில் கவனமிக்கவர்களாக இருக்க வேண்டும். மனிதத் தேர்ந்துகொள்ளுதல்களும் செயல்களும் பொருட்படுத்தப்பட வேண்டியவையாக உள்ளன. ஆகவே கிறிஸ்தவர்கள் ஜெபிக்க வேண்டும்.

யூதத்துவம் மற்றும் இஸ்லாம் ஆகிய இரண்டிலுமே, நாள் முழுவதிலும் பரவலாக்கப்பட்ட ஜெப வேளைகள் உள்ளன. இஸ்லாமிய நாடுகளில், விசுவாசிகளை ஜெபிக்க அழைக்கும் புலம்பல் போன்ற கதறல்களை நீங்கள் கேட்க முடியும். (பள்ளிவாசல்களில் ஒலிப்பெருக்கியை வைத்துக் கெண்டு தொழும் நேரங்களில் மக்களை அழைப்பதற்கு உரத்த குரலில் ஒருவர் புலம்புதலைத்தான் இது குறிக்கிறது.) பள்ளிவாசல் கோபுரங்களின் உச்சியில் இருக்கும் ஒலிப்பெருக்கிகளின் வழியே அந்த சத்தங்கள் வருகின்றன, அவை நகரங்கள் மற்றும் பெருநகரங்களில் சிதறி ஒலிக்கின்றன. மக்கள் நிற்கின்றனர், முழங்காற்படியிட்டு தொழுகின்றனர். கிறிஸ்தவர்கள் ஜெபத்திற்கென்று குறிப்பிட்ட நேரம் எதையும் கொண்டிருப்பதில்லை. எல்லா வேளைகளிலும் ஜெபித்தல் என்பதே கிறிஸ்தவ உயர்கொள்கையாக உள்ளது (காண்க 1 தெசலோனிக்கேயர் 5:17). கர்த்தருடைய மறுவருகையின் மீதான கிறிஸ்தவக் கருத்துநோக்கு, விசுவாசிகளை ஜெபிக்கும்படி போதிக்கிறது. வாழ்வு என்பது அக்கறைக்குரிய விஷயமாக இருப்பதால் எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிருப்பதால், இயேசு பரலோகத்தில் இருந்து ஆளுகை செய்வதால், அவர்கள் ஜெபிக்கின்றனர்.

*(2) கர்த்தர் விரைவில் திரும்பவும் வருவார் என்று கிறிஸ்தவப் பரதேசிகள் அறிந்திருப்பதால், அவர்களின் கருத்துநோக்கமானது ஒருவர் மற்றவரை அன்பில் ஏற்றுக்கொள்ளும் கிருபையை அவர்களுக்கு தருகிறது.* "எல்லாவற்றிற்கும் மேலாக ஒருவரிலொருவர் ஊக்கமான அன்புள்ளவர்களாயிருங்கள்; அன்பு திரளான பாவங்களை மூடும்" (1 பேதுரு 4:8). பிரச்சனை கொண்டுள்ள ஒரு சகோதரரை அல்லது பொய்யராக அல்லது களவு செய்பவராக உள்ள ஒரு சகோதரரைக் கிறிஸ்தவர்கள் காணாது விட்டுவிட வேண்டும் என்று பேதுரு கூறவில்லை. கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் கணக்கு ஒப்புவிக்க வேண்டியவர்களாக உள்ளனர். பேதுருவின் வார்த்தைகள் பாவத்திற்கு அழைப்பு விடுவிப்பவையாக இருப்பதில்லை. கிறிஸ்தவர்கள் சிந்தனையற்ற வார்த்தைகளைக் கூறுவதற்கும் இலேசாக நடந்து கொள்வதற்கும் சாக்குப்போக்கு கூறலாம் என்ற கருத்து எதுவும் இங்கில்லை. எவரொருவரும் தமது பாவங்களைப் பிறர் வந்து மூடுவார்கள் என்று எதிர்பார்க்கும் உரிமை கொண்டிருப்பதில்லை.

மக்கள் ஒருவர் மற்றவர் மீது அன்புகூரும்போது, பாவம் பற்றிய அவர்களின் கருத்து நோக்கு, சுய அக்கறையில் இருந்து மாறுபடுகிறது. என்று பேதுரு கூறிக் கொண்டிருந்தார். கிறிஸ்துவுக்குள்ளான சகோதரர்களும் சகோதரிகளும் ஒருவர் மற்றவரைத் தூக்கிச்செல்ல மறுக்கின்றனர். மாறாக அவர்கள் ஒன்றிணைந்து, பாவியை அவரது வெட்கக் கேட்டில் இருந்து தூக்குகின்றனர். அவர்கள் அவருக்கு எதிராகத் திரும்புவதில்லை; அவர்கள் அவர் பக்கம் இருக்கின்றனர். விசுவாசத்தின் இப்பக்கத்தின் மீதான கருத்துநோக்கு வேறுபட்டுள்ளது.

பேதுரு "அன்பு திரளான பாவங்களை மூடும்" என்று கூறியபோது, கிறிஸ்தவர்கள் ஒருவர் மற்றவர் மீது கொள்ள வேண்டிய நிலைப்பாட்டைப் பற்றி அவர் எடுத்துரைத்தார். அவர்கள் ஒரு சகோதரர் அல்லது சகோதரி செய்யத் தாங்கள் காணும் விஷயத்தின்மீது சரியான நோக்கங்களை வைக்க மனத்துடிப்புடன் இருக்கின்றனர். அவர்கள், ஒரு சகோதரர் அல்லது சகோதரி பேசும் வார்த்தைகளின்மீது கனிவுடன் கண்ணோக்குகின்றனர், அதே வார்த்தைகள் பிறரால் பேசப்பட்டால் அவர்களை அது புண்படுத்தி இருக்கலாம். இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று ஒரு நபர் அறிக்கையிட்ட உடனே, அதாவது அவர் மரித்தோரில் இருந்து எழுந்தார் என்றும் அவர் மறுபடியும் வருவார் என்றும் விசுவாசித்த உடனே - அதாவது இயேசுவில் உள்ள கட்டுக்களை நாம் பகிர்ந்துகொண்ட உடனே - நான் அவரை வேறுவிதமாகக் கண்ணோக்குகிறேன். அவரது நோக்கங்களை நியாயந்தீர்ப்பதில் நான் மெதுவாகச் செயல்படுவேன். அவரது நெறிமுறைகளைக் காண்பதிலும் அவற்றைப் பாராட்டுவதிலும் நான் விரைவாகச் செயல்படுவேன். பவுலோ அல்லது பேதுருவோ பின்வரும் பாடக்கருத்தின்மீது ஒருக்காலும் களைப்பு அடைந்ததே இல்லை: "ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மைசெய்யக்கடவோம்" *(கலாத்தியர் 6:10)*; *"அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது; ... சினமடையாது, தீங்கு நினையாது" (1 கொரிந்தியர் 13:4, 5).*

*(3) கிறிஸ்தவர்கள் ஒருவர் மற்றவரை அவரவர் கொண்டுள்ள வேறுபாட்டிற்காக மதிக்கக் கற்றுக்கொள்ளுவதால், கிறிஸ்தவக் கருத்துநோக்கமானது மாறுபட்டதாக உள்ளது.* நாம் யாவரும் ஒன்று போல் இருப்பதில்லை. தேவன் வெவ்வேறு வரங்களை அருளுகிறார். பேதுரு பின்வருமாறு எழுதினார்:

> அவனவன் பெற்ற வரத்தின்படியே நீங்கள் தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்துகொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர்போல, ஒருவருக்கொருவர் உதவிசெய்யுங்கள். ஒருவர் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன்; ஒருவன் உதவிசெய்தால் தேவன் தந்தருளும் பெலத்தின்படி செய்யக்கடவன் ... *(1 பேதுரு 4:10, 11அ).*

நாம் யாவருமே மாறுபட்ட நிலைப்பாடுகளைக் கொண்டிருக்கிறோமே. சிலர் உணர்வுரீதியாக அமைதியானவர்களாக உள்ளனர்; மற்றவர்கள் பேசிக்கொண்டிருப்பவர்களாக உள்ளனர். சிலர் விரைவில் முடிவெடுக்கும் திறன் கொண்டுள்ளனர், மற்றவர்கள் நிதானமானவர்களாக நம்பகத்தன்மை வாய்ந்தவர்களாக உள்ளனர். கிறிஸ்தவர்கள் தங்கள் ஆண்டவரை அறிதலில் இருந்து வருகிற கருத்து நோக்கைக் கொண்டுள்ளபோது, அவர்கள் தங்கள் சக விசுவாசிகளை அன்பின் ஆரோக்கியமான அளவுடன் மதிப்பீடு செய்கின்றனர். ஒரு நபர் நல்லவராக இருப்பதாக அறிதல், அவரது அல்லது அவளது வாழ்வில் ஆவியின் கனியைக் கண்டிருத்தல் ஆகியவை உள்ள நிலையில் சீஷர்கள் ஒருவர் மற்றவரை உபகார உணர்வுடன் கையாளுகின்றனர். அது பாவத்தை கண்டித்து உணர்த்துதல் போன்றதாக இருப்பதில்லை. அது தவறுகள் இருந்தாலும்

அன்புகூருதல் என்பதாக உள்ளது.

விசுவாசிகள் ஒருவர் மற்றவரில் தாங்கள் காணும் வேறுபாடுகளுக்காக நன்றி செலுத்த வேண்டும் என்றும் தங்கள் சொந்த வரங்களில் இருந்து மாறுபட்ட வரங்களைக் கொண்டுள்ள மற்றவர்களை மதிக்க வேண்டும் என்றும் விசுவாசிகளைப் புதிய ஏற்பாடு அடிக்கடி வேண்டிக் கேட்டுக்கொள்கிறது (காண்க 1 கொரிந்தியர் 12:12, 13). அன்பு நம்மிடத்தில் நம்மால் இயலாதவற்றை வற்புறுத்திக் கேட்பதில்லை. அது நாம் எல்லாரும் ஒரே வகையான தனிநபர்களின் இணையை மகிழ்வுடன் அனுபவிக்க வேண்டும் என்று கேட்டுகொள்வதில்லை. நாம் மற்றவர்களைக் காட்டிலும் சிலரிடம் அதிகமாகவே பொதுவான விஷயங்களைக் கொண்டிருக்கிறோம். சிலர் தங்களுக்கு விசேஷமாய் அன்புடையவர்களாக இருப்பதால் கிறிஸ்தவர்கள் தவறாக இருக்கிறார்கள் என்று அர்த்தமல்ல, ஆனால் கிறிஸ்து இதைக்காட்டிலும் பெரியவர்களாக இருக்கும்படி நம்மிடத்தில் கேட்டுக்கொள்கிறார். எல்லா மக்களையும் மதிக்கும்படியும், நமது சகோதரர்கள் சகோதரிகளை கனிவுடன் கண்ணோக்கும்படியும், குற்றப்படுத்துதல் மற்றும் விமர்சித்தல் ஆகியவற்றை நிதானித்துச் செய்யும்படியும் நம்மிடத்தில் அவர் கேட்டுக்கொள்கிறார்.

இங்கு பேதுருவின் அடிப்படைக் கோடுள்ளது. நமது சுய மகிமையைக் காட்டிலும் தேவனுடைய மகிமை மிகவும் முக்கியமானதாக உள்ளது என்பதை நாம் நினைவில் வைக்க வேண்டும் என்று அவர் கூறினார். நமது உணர்வுகள் புண்படுத்தப்பட்ட நிலையில் நாம் நிலைநிற்க முடியும். அதை நாம் சமாளித்து வெளிவரவும் முடியும். நாம் விரும்பாத சிலவிஷயங்களைக் கூறியது நல்ல மனிதரா அல்லது நல்ல பெண்ணா என்பதை நமக்கு நாமே நினைவுபடுத்திக் கொள்ளவும் நம்மால் முடியும். நற்தன்மை என்பது அவர்களின் வாழ்வில் உள்ளது, கிறிஸ்தவர்கள் “எல்லாவற்றிலேயும் இயேசுகிறிஸ்துமூலமாய்த் தேவன் மகிமைப்படும்படியே செய்வீர்களாக; அவருக்கே மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக. ஆமென்” (1 பேதுரு 4:11ஆ) என்ற வசனத்திற்கிணங்கச் செயல்படுகின்றனர்.

*முடிவுரை.* சபை என்பது உங்களையும் என்னையும் பற்றிய விஷயமல்ல, அது தேவனையும் அவரது மகிமையையும் பற்றிய விஷயமாக உள்ளது. சிலுவையினிமித்தம் இயேசு உங்களுடைய மற்றும் என்னுடைய பாவங்களைக் (மன்னிக்க) கண்ணோக்காமல் (மன்னித்து) விடக்கூடும் என்றால், நாம் ஒருவர் மற்றவரின் பாவங்களை கண்ணோக்காமல் (மன்னித்து விட்டு) இருக்க முடியும். நம்மில் பெரும்பான்மையானவர்களின் வாழ்வில் மேம்படுத்தப்பட வேண்டிய சில விஷயங்கள் உள்ளன. ஒருவர் குறைகளை ஒருவர் பொறுத்துக்கொள்ளுதல் என்பது, எவரொருவரும் நமது தவறுகள் பற்றி நம்மிடம் எதுவும் கூறக்கூடாது என்று அர்த்தப்படுத்துவதில்லை. நமது கிறிஸ்தவ வாழ்வில் நாம் குறைவுபடுகிற சில பகுதிகளைப் பற்றிக் கூறவரும் சகோதரர் ஒருவர் நம்மை அன்புடன் அணுகி நம்மை மதித்து பேசுகிறார் என்றால், நாம் அதைத் தாங்கி நிற்க முடியும். அன்பு திரளான பாவங்களை மூடும் என்பது, நாம் ஒரு தவறை வெற்றிகொள்ள நமக்கு உதவலாம் என்று யாரேனும் ஒருவர் நினைக்கும் ஒவ்வொரு வேளையிலும் நாம் சீற்றம் கொள்ள வேண்டும் என்று அர்த்தப்படுவதில்லை.

**குறிப்புகள்**

[1]Wayne A. Grudem, *The First Epistle of Peter: An Introduction and Commentary,* Tyndale New Testament Commentaries, vol. 17 (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1988), 167. [2]*இரண்டாம் நூற்றாண்டின் மத்திய காலத்தில் வாழ்ந்த சொல்லாடற் கலைஞரான, ஐலியுஸ் அரிஸ்டைடஸ் என்பவர், தமது கால உலகத்தின், குறைகாணும் தத்துவஞானிகளை எதிர்த்துத் தாக்கி, பின்பு தமது தாக்குதலை புதிய மதமான கிறிஸ்தவத்தின் மீது திருப்பினார். குறைகாணும் தத்துவ ஞானிகளைப்பற்றி அவர்; "அவர்களின் நடத்தையும்கூட பலஸ்தீனத்தில் இருந்த தேவதூஷணம் செய்யும் மக்களின் வாழ்வைப் போன்றே இருந்தது. இவர்களும்கூட (அதாவது கிறிஸ்தவர்களும்கூட) தங்களுக்கு மேலாக உள்ளவர்களிடம் தாங்கள் அங்கீகரியாத தெளிவான அடையாளங்களினால் தங்கள் தேவபக்தியற்ற தன்மையை காட்சிப்படுத்துகின்றனர், மற்றும் அவர்கள் கிரேக்கர்களிடத்தில் இருந்தும் நன்மையான எல்லாவற்றிடம் இருந்தும் தங்களைத் தாங்களே பிரித்துக் கொண்டுள்ளனர்" என்று கூறினார்.* (Aelius Aristides *Orations* 46.) *பேதுருவின் காலத்திற்கு அண்மையில் வாழ்ந்தவரான அரிஸ்டைடஸ், இந்த அப்போஸ்தலர் கருத்தாகத் தெரிவித்த அதே காரணத்திற்காகவே கிறிஸ்தவர்கள் மீது குற்றச்சாட்டுகளைக் குவித்தார்: "அவர்களுடன் நீங்களும் அதே இழிவான நடத்தை என்ற வெள்ளத்தில் மூழ்காது இருக்கிறபடியால், உங்களை வினோதமானவர்களாக அவர்கள் இணைக்கின்றனர்" (1 பேதுரு 4:4).* [3]Leon Morris, *The Biblical Doctrine of Judgment* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1960), 72. [4]John Murray, *Principles of Conduct: Aspects of Biblical Ethics* (London: Tyndale Press, 1957), 72. [5]***1:13** ன் மீதான விளக்கங்களைக் காணவும்.* [6]J. N. D. Kelly, *A Commentary on the Epistles of Peter and of Jude*, Black's New Testament Commentaries (London: Adam & Charles Black, 1969), 176. [7]*இது சரியான உபதேசத்தை முக்கியத்துவம் அற்றதாக்குவதல்ல. சரியான உபதேசம் என்பது கலாத்தியக் கிறிஸ்தவர்களின் தேவையாக இருந்தது. அது 2 பேதுரு நிருபத்தில் குறிக்கப்பட்ட விசுவாசிகளின் தேவையாகவும் இருந்தது.* [8]*கெல்லி இந்த கண்ணோக்கை ஆதரித்தார்* (Kelly, 178.) [9]J. *இராம்ஸே மிக்காயேல் அவர்கள் இவ்வசனப்பகுதியை இவ்வாறுதான் புரிந்துகொண்டுள்ளார்.* (J. Ramsey Michaels, *1 Peter,* Word Biblical Commentary, vol. 49 [Waco, Tex.: Word Books, 1988], 247.) [10]Alan M. Stibbs and Andrew F. Walls, *The First Epistle General of Peter,* Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1959), 57.